மாலைமணி

ஆசிரியர்: பி.எஸ்.இளங்கோ

கேரளத்தில் காங்கிரசுக்கு கலப்புத் திருமணம் !

மாலைமணி

ஆசிரியர்: பி. எஸ். இளங்கோ

மணி 2 | 14-2-60 | ஒலி 15

நமது மாணவர்ப் படை!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், மாணவர்களுக்கும் எப்போதுமே நெருங்கிய தொடர்பும், உறவும், பாசமும் உண்டு! திராவிட முன்னேற்றக் கழகம் என்றால் மாணவர்களெல்லாம் கரும்பைக் கண்ட எறும்புகளைப்போல் மொய்த்துக் கொள்ளுகின்றனர்! இதற்கெல்லாம் காரணம் நமது கழகத்தின் கொள்கையும், இலட்சியமும்—உயர்ந்தது, உன்னதமானது என்பதுதான்!

திராவிடர் கழகமாக இருந்த காலத்திலேயே மாணவர்கள் அனைவரும் தங்களுக்கென ஒரு கழகத்தை அமைத்துக் கொண்டு நமது கொள்கைகளைப் பரப்பி வந்தனர்! நாம் பிரிந்து தனியே வந்த பின்னரும் மாணவர்ப் படை நம்மைவிட்டு அகலவே இல்லை! அவர்களுடைய ஆதரவு நமக்கு நாளுககு நாள் அதிகரித்துக் கொண்டும் வருகிறது!

செயல் வீரர் **திரு. கே. ஏ. மதியழகன்** மாணவர்ப் படையின், தலைவராக இருந்து பெரும் பணி புரிந்திருக்கிறார்! அவர் காலத்தில், அவருடைய பண்பால்; குணத்தால், கொள்கை உறுதியால் மாணவர்களை ஒழுக்க சீலர்களாக்கினர் என்பதை எவரும் மறந்துவிட முடியாது! அவர் செய்த பணியே மாணவர் கழகத்தின் இன்றைய பெரும் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும்!

இப்போது அந்தப் பொறுப்பை மாணவர் **திரு. எஸ். டி. சோமசுந்தரம்** ஏற்றுக் கொண்டிருக்கிறார்! நல்ல முறையிலும் செயலாற்றி வருகிறார்!

மாவட்டம் தோறும் மாநாடு நடத்தி நமது கொள்கைகளை பரப்பிடும் பெரும் பணியில் ஈடுபட்டு வருவது குறித்து உண்மையிலேயே பெரும் மகிழ்ச்சியடைகிறோம்! மாணவர்கள் அனைவரும் அவருக்குப் பெருந் துணை புரிந்து ஊக்கமளிக்க வேண்டும்!

திரு. எஸ். டி. சோமசுந்தரம் பொறுப்பேற்றிருக்கும் இந்த நேரம் மிக நெருக்கடியான நேரமாகும்! பல எதிர்ப்பு சக்திகளை சமாளிக்க வேண்டிய நேரமாகும்!

மாணவர்களெல்லாம் அரசியலில் ஈடுபடக்கூடாது என்று காங்கிரஸ் தலைவர்களும், அமைச்சர்களும் கூறி வருகின்றார்கள்! மாணவர்கள் ஒழுக்கம் கெட்டு விட்டார்கள, நெறி தவறி விட்டார்கள், நேர்மையை இழந்து விட்டார்கள் என்றெல்லாம்கூட அவர்கள் பேசி வருகிறார்கள்!

சென்ற சில மாதங்களுக்கு முன்பு சென்னை மாநிலத்து கல்வி அமைச்சர் கனம். சுப்பிரமணியம், மாணவர்களை அரசியலில் உலகத்திலிருந்தே வெளியேற்ற வேண்டும் என்று பெரும் முயற்சி செய்து வந்தா—இப்போதும் செய்து வருகிறார்!

டில்லியில் அமர்ந்திருக்கும் கல்வி அமைச்சர் ஸ்ரீமாலியும் இப்போது இந்தப் பெரும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்!

நேற்றைய தினமும், அதற்கு முன்பும் இல்லாத அக்கறை இன்று மட்டும் ஏற்படக் காரணம் என்ன?

நேற்றைய தினம் மாணவர்கள் அரசியலில் ஈடுபட்டது ஒழுங்காக இருந்தது. நாணயமாக இருந்தது, நேர்மையாக இருந்தது! இன்று மட்டும் ஒழுக்கம் குறைந்து போனது ஏன்?

காங்கிரஸ் கட்சியை வளர்த்தவர்களே மாணவர்கள் தான்! 1942-ம் ஆண்டு நடைபெற்ற ஆகஸ்டு கலவரம் உச்சநிலை அடைந்ததற்கு காரணமே மாணவர்கள் தானே! மாணவர்களை பலியிட்டுதானே சுதந்திரமே பெற்றீர்கள்!

கேரளத்தில் கம்யூனிஸ்டு சர்க்காருக்கு எதிராக பெரும் ஆர்பாட்டத்தை மாணவர்கள் நடத்தியபோது காங்கிரஸ் மந்திரிகளெல்லாம் வாயமூடி மௌனிகளாக இருந்தது எதனால்?

மாணவர்கள் அனைவரும் காங்கிரஸ் கட்சியை தீண்டவில்லை என்ற காரணம் தானே? மாணவர்கள் அனைவரும் காங்கிரஸ் கட்சியை எதிர்க்கின்றனர் என்பது தானே!

மாணவர்கள் ஏன் அரசியலில் ஈடுபடக்கூடாது? எப்படி அவர்களுடைய ஒழுக்கம் கெட்டு விடும்? மாணவர் பருவத்திலேயே அரசியலில் ஈடுபட்டு, இன்று அமைச்சர்களாகவும், தலைவர்களாகவும் அமர்ந்திருக்கிறவர்களுடைய ஒழுக்கமெல்லாம் கெட்டா இருக்கிறது?

மாணவர்கள்தான் வருங்காலத்தை ஆட்சி செய்யப் போகிறவர்கள்! அவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்றால் வருங்காலம் எப்படி இயங்கும்! அரசியலே தெரியாமல் வருங்காலத்தை அவர்கள் எப்படி நிர்வகிப்பார்கள்! வருங்காலத்தைப் பற்றி கொஞ்சமும் யோசிக்காமல் —"மாணவர்களெல்லாம் மாற்று கட்சியில் சேர்ந்து விடுகிறார்களே" என்று பொறாமையால். பொச்செரிப்பால் பேசி வருகிறார்கள்!

தென்னகத்தைப் பொறுத்த வரையில் மாணவர்கள் அனைவரும் திராவிட முன்னேற்றக் கழக பாசறையில் தான் பணிபுரிந்து வருகின்றனர்! ஆல்போல் தழைத்து வரும் நமது கழகத்திற்கு மாணவர்கள் விழுதுகளாக விளங்குகின்றனர்! இதை தடுக்கவோ, அழிக்கவோ எவராலும் முடியாது என்பதை காங்கிரஸ் அமைச்சர்கள் உணர வேண்டும்! மாணவர்களும் இதை உணர்த்தும் வகையில் பணி புரிய வேண்டும்!

மாணவர் கழகத்திலிருப்பவர்கள் அனைவரும் புடம் போட்டு எடுக்கப்பட்ட தங்கக் கட்டிகள்! "வெட்டி வா" என்றால் "கட்டி வரும்" செயல் வீரர்கள்!

மாணவர் கழகத்தில் சிறந்த பேச்சாளர்கள் இருக்கிறார்கள், எழுத்தாளர்கள் இருக்கிறார்கள், செயல் வீரர்கள் இருக்கிறார்கள்! அவர்கள் அனைவரும் செயலில் ஈடுபட்டு உழைக்க வேண்டும்! அதே நேரத்தில் தங்களுடைய சொந்த இலட்சியத்தை மறந்தும்விடக்கூடாது! படித்து, பட்டம் பெற்று நாட்டுக்கு நல்ல அறிவுரைகளை வழங்க வேண்டியவர்கள் இதை முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும்!

நமது அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுவதுபோல் நமக்கு டாக்டர்கள் வேண்டும், என்ஜினியர்கள் வேண்டும், தொழில் நுணுக்க நிபுணர்கள் வேண்டும், நிர்வாக அதிகாரிகள் வேணடும்! இதற்கெல்லாம் நாம் கடன் கேட்க வேண்டிய நிலையில் இருக்கக்கூடாது!

மாணவர் கழகத்தில் அனுபவமிகுந்தவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள்! திரு. வெங்கடாசலம், பொன்னுவேலு, கோவை ஆறுமுகம், பி. வி. செழியன் போன்ற பல்வேறு செயல் வீரர்கள் இருக்கிறார்கள்! இவர்கள் இருக்கும்போது மாணவர் கழகத்தின் சிறப்பு குறையாது என்பதை நாம உணர்கிறோம்!

ஒவ்வொரு மாணவர்களும் கடமை உணர்ச்சியோடு பணிபுரிந்து மாணவர்களுககும், நமது கழகத்திற்கும் நாட்டிற்கும் பெருமையைத் தேடித் தர வேண்டும்! தஞ்சை மாவட்ட மாநாடும், சேலம் மாவட்ட மாநாடும் இதற்கான நல்ல வழிகளை வகுத்து செயல்புரிய ஊக்கமளிக்கட்டும்!

இலக்கியமும் வாழ்க்கையும் ஒன்றோடொன்று இணைய வேண்டும்!

தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைப்பதே வாழ்க்கையாகும்!

மாற்றார் மதிக்கத் தக்க விதத்தில் வாழ்வதே சிறப்பான வாழ்க்கையுமாகும்!

மணவழகர் மன்றத்தின் முத்தமிழ் விழாவின் முதல் நாள் அன்று அறிஞர் அண்ணா அவர்கள் கலந்து கொண்டு பேசியதாவது—

மணவழகர் மன்றமுத்தமிழ் விழாவில் அறிஞர் அண்ணா பேருரை!

தகுதி மிக்க தலைவரவர்களே, டாக்டர் அவர்களே, நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

இந்த விழாவினை ஏற்பாடு செய்திருக்கும் மணவழகர் மன்றத்தாரின் இந்த பணி, பயன பெறத் தக்க பல பணிகளிலே ஒன்றாகும். அவர்கள் ஆண்டு தோறும் நடத்துகின்ற விழாவிற்கு, இவர்கள் ஆற்றுகின்ற பணி உறுதுணையாக இருக்கும். இந்தப் பணியினை திறம்பட, செம்மையாகத் தோழர்கள் செய்திருக்கின்றனர்! மக்கள் பெரிதும் இலக்கியத்தை அறிந்து கொள்கின்ற வாய்ப்பை இந்த விழாவின் மூலம் அளித்திருக்கிறார்கள்! அதற்காக மணவழகர் மன்றத் தோழர்களை பெரிதும் பாராட்டுகிறேன்!

நம் தலைவர் அவர்கள் நீதி மன்றத்திலே நீதிபதியாக இருப்பவர். இவரை சந்திப்பது இது தான் முதல் கடவை யாகும்! சட்டக் கல்லூரியில் இவரோடு அளவளாவிய நேரத்தில் தமிழ் இலக்கியங்களைப் பற்றி மெத்த அறிந்து கொண்டிருக்கின்றார் என்பதனை தெரிந்து கொள்கின்ற வாய்ப்பினை பெற்றேன்! பயங்கரமான, பெரிய கட்டடமான நீதி மன்றத்தில் நுழைந்த பிறகு இந்தத் தமிழ் ஆர்வத்தை குறைத்துக் கொள்வார்களோ என்று ஐயப்பட்டேன்!

இன்று, நீதிபதி அவர்கள், நீதி மன்றத்தில் எழுப்புகின்ற வினாவைப் போல, சில வினாக்களை எழுப்பி நான் பதில் சொல்லவேண்டுமென்று கேட்டிருக்கிறார்!

நீதிபதியின் வினா எப்போதுமே ஆபத்தானது என்பதை வழக்கறிஞர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்!

யூகம் அதிகமுள்ள வழக்கறிஞர்களால் அதை புரிந்து கொள்ள முடியும்! நீதி மன்றங்களில் சில வழக்கறிஞர்கள் எதை எதைச் சொல்லக் கூடாது என்று நினைக்கிறார்களோ, அதையெல்லாம் நீதிபதி தங்களின் வினாவினால் சொல்ல வைக்கவும செய்யலாம்! நம் தலைவர் அமர்ந்திருப்பது நீதி மன்றமும் அல்ல, தமிழ் குற்றக் கூண்டிலே நிற்கவும் இல்லை நானும் தைரியமாகவே பதில் சொல்லலாம், யாரும் பயப்பட தேவையு இல்லை!

இந்த விழாவிலே கலந்து கொள்வதற்கு முன்னாலே எனக்கு திகைப்பு இருந்தது! என்ன திகைப்பு என்று நீங்கள் கேட்கக் கூடும்!

நண்பர் கோகுல கிருஷ்ணன் சந்தித்து தமிழ் இலக்கியத்தை பற்றி பேச வேண்டுமென்று சொன்ன நேரத்தில், எனக்கு திகைப்பு ஏற்பட்டது. நான் தமிழ் இலக்கியம் அதிகம் படிக்காதவன் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும்!

டாக்டர் சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். நான் இங்கு தமிழ் இலக்கியத்தை பற்றி பேசுவதென்பது, மாணவன்படித்தவைகளை ஆசிரியர் முன்னே சொல்லுவதைப போலாகும்!

நீதிபதி அவர்கள் இரண்டு பிரச்னைகளை எழுப்பியுள்ளார்கள். வாழ்வு என்றால் என்ன, இலக்கியம் என்றால் என்ன என்று கேட்டிருக்கிறார்கள்.

வாழ்க்கை இல்லையென்றால் இலக்கியமில்லை. இலக்கியமில்லையென்றால் வாழ்க்கை இல்லை! இலக்கியமும். வாழ்க்கையும் ஒன்றோடொன்று இணைந்து இருக்க வேண்டும்.

இப்போது வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் எந்த வகை தொடர்பு இருக்கிறது. இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் எப்படிப்பட்ட தொடர்பு இருக்க வேண்டும். இப்போது எப்படி இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இலக்கியம் வளர்ச்சி பெற வேண்டுமென்று பேசுகிறவர்கள் எப்படி வளர்ச்சியை உண்டாக்க வேண்டுமென்று சிந்திப்பதில்லை!

நீங்களும் நானும் இலக்கியப் பேராசிரியர்கள் அல்ல. விழா முடிந்த பிறகு, ஏற்படுகின்ற ஐயப்பாடுகளை எப்படி தீர்த்துக் கொள்வது?

அனைவரும் வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ளுவதிலேயும், எப்படி வாழுவது என்பதை அறிய அக்கறை கொண்டிருக்கிறோமே தவிர, இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு என்ன என்று அறிந்து கொளவதிலே அக்கரை செலுத்துவதில்லை — எண்ணிப் பார்ப்பதுமில்லை. இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் என்ன தொடர்பு என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

தலைவரவர்கள் புரட்சி என்றால் என்ன என்றும் கேட்டார்கள்.

எதிர்பாராத விதத்திலே வருவது புரட்சி, எண்ணிப் பார்த்து—வரும் வரும் என்று காத்திருந்து பெறுவது மறுமலர்ச்சி.

(4-ம் பக்கம் பார்க்க)

எதிர்பாராத விதத்தில் வருவது புரட்சி!

எண்ணிப் பார்த்த பிறகு வருவது மறுமலர்ச்சி!!

அழிவை அடிப்படையாகக் கொண்டு எழும் புரட்சி பலன் தராது !

(அண்ணா பேச்சு)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

புரட்சி என்னும் சொல் அரசியலில் கலந்து விட்ட பிறகு நாட்டில் உள்ளவர்கள் இழித்துரைத்தும், பழித்துரைத்தும் பலாத்காரத்தின் அடிப்படை புரட்சி என்னும் விளக்கம் தருகின்றனர். விஞ்ஞான, இலக்கியத்திலே கூட எதிர்பாராத விதமாக புரட்சி ஏற்பட்டிருக்கிறது. சந்திரமண்டலத்தைப்பற்றி இது வரை தெரிந்த உண்மையைக் காட்டிலும் புதிய உண்மைகளை திடீரென்று அளித்தது விஞ்ஞான இலக்கியத்தில் புரட்சி என்று கூறலாம்! உலகத்தைப் பற்றி கலிலீயோ கண்டு பிடித்து கூறியதை மறுமலர்ச்சி என்று கொள்ளலாம்! அன்று அவர் விஞ்ஞானத்தில் ஏற்படுத்திய மறுமலர்ச்சி இன்றைய விஞ்ஞான புரட்சிக்கு வித்தாக அமைந்தது.

வளருகின்ற பயிருக்கு நல்ல வளர்ச்சி இருக்க வேண்டுமானால் உரம்போடுகிறோம், அதைப் போல் அன்றைய மறுமலர்ச்சி, இன்றைய—புதிய விஞ்ஞானப் புரட்சிக்கு உரமாக அமைந்தது! இன்று மறுமலர்ச்சியும், புரட்சியும், ஒன்றுக்கொன்று தழுவிக் கொண்டிருக்கின்றன !

மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் இன்னும் அதிகமாக பெருகிட வேண்டும் என்று மதுரையில் நடை பெற்ற கூட்ட மொன்றில் கூறினேன்.

மறுமலர்ச்சி மனதிலே இருந்து விட்டால் மட்டும் போதாது! எழுத்தில், எழுதி அதை நடை முறைக்கு அமைக்காதவர்கள் மறுமலர்ச்சி எழுத்தாளர்களாகமாட்டார்கள்!

வேகமாகவும் எதிர்பாராத விதமாகவும் எடுத்துச் சொன்ன சில எழுத்தாளர்களை புரட்சி எழுத்தாளர்கள் என்று கூறினார்கள். புரட்சி என்னும் சொல் அரசியலில் கலந்து விட்ட பிறகு சீர்திருத்தபடங்களை புரட்சிப் படங்கள் என்றார்கள். மறுமலர்ச்சிக் கவிதைகளை தந்த பாரதிதாசன் அவர்களை புரட்சிக் கவிஞர் என்று நாட்டுமக்கள் பாராட்டினார்கள்.

நாம் காத்திருந்தால், இன்னும் ஐம்பதாண்டு காலம், அறுபதாண்டு காலத்திற்குப் பிறகு இந்தக் கருத்துக்கள் நமக்கே தோன்றும். கவிஞர் வேகமாக சிந்தித்து, அதை வேகமாக மக்களுக்கு அளித்தார், மக்களும் அதை பலப்பட பாராட்டி, பயனுற்றனர்!

வேகம் தாங்காமல் சில அழிந்து விடும். இப்போது வீதியிலே உருளை வண்டி போகிறது என்றால், அதை இழுத்துச் செல்பவனின் கண்களுக்கு தெரியாமலேயே சக்கரத்தில் அகப்பட்டு வண்டியின் வேகம் தாங்காமல் சில அழிந்துவிடும் அவைகள் கொலை என்று கருதப்பட்டாலும் அப்படிப்பட்ட வழக்குகள் நீதிமன்றத்துக்கு வருவதுமில்லை-தீர்ப்பு சொல்லுவதுமில்லை! வண்டி இழுப்பவன் வேண்டுமென்றே அதைச் செய்வதில்லை. அழிவை அடிபடையாக வைத்து புரட்சி எழுவது நீடிக்காது!

மேலும் இலக்கியம் யாருக்காக இருக்கிறது. இலக்கியம் இப்போது எப்படி இருக்கிறது. இலக்கிய வளர்ச்சிக்காக என்ன செய்து கொண்டிருக்கிறார்கள். இலக்கியத்தை எப்படி பயன்படுத்திக்கொள்ளப் போகிறார்கள்?

மரத்தில் பழுத்து இருக்கும் பழுத்தபழத்தைபார்த்ததும் தின்பதற்கு ஆசையிருக்கிறது. பழத்தை எப்படி தின்பது? பதிந்து சாப்பிட போகிறார்களா இல்லை, பாராமல் எடுத்து தின்னப் போகிறார்களா?

சித்தர்கள் போல் காத்திருந்து—தானாக கனிந்து விழுந்ததும் சாப்பிடப்போகிறார்களா? இல்கக்கிய வளர்ச்சியை எப்படி பயன்படுத்தப்போகிறார்கள் என்பதை அறியவேண்டும்.

அடிப்படையில் இலக்கியம் யாரால் இயற்றப்பட்டது. அது யாருக்காக இயற்றப்பட்டிருக்கிறது. அது என்னென்ன காரியங்களுக்கு பயன்பட்டிருக்கிறது என்பது தான் அதில் முக்கியமானதாகும்,

அதை கவனிப்பதற்கு முன்னால், இலக்கிய வளர்ச்சிக்கு ஏற்ற கல்வி முறை இப்போது இருக்கிறதா என்பது ஐயப்பாட்டுக்குரியதாகும். இப்போது இருக்கிற கல்வி முறையால் இலக்கியம் வளர்ச்சி அடையுமா?

இப்போதெல்லாம் கல்லூரிகள் மூடப்பட்டு வருகின்றன என்ற செய்தியை பத்திரிகை படிப்பவர்கள் அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அதற்கு காரணத்தை அவர்கள் கூறுகின்ற நேரத்தில்—மாணவர்கள் குறைவாக வருகிறார்கள் என்று கூறுகிறார்கள்.

மாணவர்கள் தொழில் பள்ளிக் கூடங்களுக்கு சென்று விடுகிறார்களென்றும் கூறுகிறார்கள். இந்த நிலைமை இப்படியே நீடிக்குமானால் இலக்கியத்தை கல்லூரிகள் பரப்ப முடியாது; மணவழகர் மன்றத்தைப் போன்றவர்களால் தான் இலக்கிய வளர்ச்சி பெற முடியும்.

நான் கல்லூரியிலே படித்துக் கொண்டிருந்த போது எந்த படிப்பு படிப்பது என்று யோசித்து கொண்டிருந்தபோது நண்பர்களும்; ஆசிரியர்களும் இலக்கிய படிப்பு படித்தால் வேலை கிடைக்காது, பொருளாதார படிப்பு படித்தால் தான் வேலை கிடைக்கும் என்று வற்புறுத்தினார்கள்.

வரலாற்றுப்படிப்பு படித்தால் வேலை கிடைக்காது என்று மாணவர்கள் பொருளாதார படிப்பு வகுப்பிற்கு சென்று விடுவார்கள். வேதாந்த படிப்பு வகுப்பாசிரியர் எப்படியாவது இரண்டு மூன்று மாணவர்களை இழுத்துப்பிடித்து வகுப்பு நடத்துவார். பொருளாதார படிப்பு வகுப்பிற்கு நூறு மாணவர்கள் தேவை என்றால் மற்ற மாணவர்களை ஒதுக்கித் தள்ளினார்கள்.

இன்று படித்தால் மட்டும் போதும் என்கிறார்களே தவிர, கல்லூரி படிப்பு தேவை என்பது அல்ல! இன்றைய படிப்பு படிக்கின்றவர்கள் வியாபாரக் கண்ணோடு படிக்கின்றனர். வீட்டிலே உள்ள பெரியவர்கள், ஏன் வியாபார நோக்கத்தோடு படிக்கிறாய் என்று கேட்டால், நீயும் மாணவனாக இருந்த போது வியாபார நோக்கத்தோடு படித்தாய் என்று கேட்கும் அளவிலே இருக்கிறார்கள்.

அன்று இலக்கியம் படித்தவர்கள், குடும்பத்திலே வசதியோடு இருந்தவர்கள் தான் இலக்கிய படிப்பு படித்தார்கள்! படித்து பட்டம் பெற்று, இன்னொரு கல்லூரியில் போய் விரிவுரையாளராக பணியாற்றுவார்கள். பொருளாதார படிப்பு முடித்து பட்டம் பெற்றால் ஒரு 500 ரூபாய் சம்பளத்தில் வேலை காத்திருக்கும் என்று அன்று நினைத்தார்கள்.

இப்போது கல்லூரி படிப்பு என்பது காலக்கேடு. நேரக் கேடு என்றும் கருதுகிறார்கள்! பத்தாவது வரை படித்தால் போதும், அவரவர்கள் விரும்பும் தொழிலில் ஈடுபட்டு விடுகின்றனர்.

மின்சார தொழிலிலே விருப்பம் உள்ளவர்கள் மின்சார தொழிலுக்கும், பஞ்சாலைக்கு செல்ல விரும்புபவர்கள் பஞ்சாலைக்கும், ஆள் பலம் இருப்பவர்கள் மருத்துவ துறைக்கும் சென்று விடுகிறார்கள்.

படிக்கிற போதே மாணவர்கள் தொகை பிரிந்து விடுகிறது! மிச்சம் உள்ள மாணவர்களில் எத்தனை மாணவர்கள் இலக்கியம் படிக்கப் போகிறார்கள்? 1970-ம் ஆண்டில் எத்தனை மாணவர்கள் இலக்கிய வகுப்பு படிக்கப் போகிறார்கள்?

இப்போதுள்ள கல்வி முறையைக் காணுகின்ற போது, கல்லூரிகளினால் இலக்கியம் வளராது என்பது தெளிவாகி விட்டது! முன்பு கல்லூரிகளில் இருந்த நிலைமைகளை உங்களுக்கு எடுத்துச் சொன்னேன். அந்த நிலைமைகள் மாற்றப்பட்டாலொழிய இலக்கியம் வளராது! மாற்றப்படவில்லையென்றால் கல்லூரிகளால் இலக்கிய வளர்ச்சி ஏற்படாது!

இப்பொழுதுள்ள துரைத்தனத்தார் வியாபாரத்துறைக்கு பெயரிடுவது போல், பள்ளிகளுக்கு 'பல விஷயங்களைக் சொல்லிக் கொடுக்கும் இடம்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள், முன்பெல்லாம் பள்ளிகளுக்கு, கல்விக் கூடம், அறிவாலயம் என்றெல்லாம் அழகாக பெயர் வைத்திருந்தார்கள். அதை இப்போது இப்படி மாற்றியிருக்கிறார்கள். ஆகையால் தான் எதிர்காலத்தில் இலக்கியம் வளருமா என்ற ஐயப்பாடு இருப்பதாக முன்பு சொன்னேன்! ஆகவே நீதிபதியின் முன் இவைகளைச் சொன்னேன், அவர் தீர்ப்புச் சொல்லுவார் என்றும் கருதுகிறேன்.

இலக்கியம் யாருக்காக அமைக்கப்பட்டது. அதனால் என்ன பலன்? இலக்கியத்தால் எத்தகைய பலனை பெற வேண்டும்? அன்றிருந்த தமிழறிஞர்கள் பொது வாழ்க்கையிலே நாட்டம் கொள்ளாமல் தனி வாழ்க்கையிலே அதிகமாக இருந்திருக்கிறார்கள். இன்று சமுதாயத்தில் தனி வாழ்க்கையை விரும்பவில்லை, கூட்டு வாழக்கையையே விரும்புகிறார்கள்.

அன்று தனித்து வாழ்ந்து, அறிவுத் திறனால், காலத்தினால் அழிக்க முடியாத பேரிலக்கியங்களை ஆக்கித் தந்தார்கள்,

டாக்டர் சிதம்பரனாத செட்டியார் அவர்கள் பேசுகையில் கூட்டு வாழ்க்கையின் தன்மையினைப் பற்றி எடுத்துரைத்தார்கள்.

கணவனாலே கைவிடப்பட்ட காரிகையைப் பற்றி சிந்தனை செய்து எழுத்தாளனாலே எழுத முடியும். அந்தக் காலத்தில் சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகியை பிரிந்த நேரத்தில், அப்பொழுதிருந்த புலவர்கள் கண்ணகியின் பிரிவை குறித்து கோவலனிடத்தில்சொல்லவில்லை!

(5-ம் பக்கம் பார்க்க)

கலீலியோ சொன்ன கருத்து தான்-இன்றைய விஞ்ஞானப் புரட்சிக்கு வித்திட்டது!

(அண்ணு பேச்சு)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லத் தெரியாது என்பதல்ல, காரணம்! கூட்டு வாழ்க்கை அதிகமில்லாத நேரம் அது! இப்போது சொல்லப் போவது சிலப்பதிகார கண்ணகி அல்ல; ஒரு வள்ளலின் மனைவி கண்ணகி என்று பெயர்!

அந்த வள்ளல் தன் மனைவியை விட்டுப் பிரிந்து காதல் கிழத்தியின் இல்லத்திலே இருந்தான். கண்களிலே கண்ணீர் கலங்க, சோக சித்திரமாய் இருந்த அவன் மனைவியின் நிலையைக் கண்டு இரண்டு புலவர்கள், அந்த வள்ளலிடத்திலே எடுத்துச் சொல்லச் சென்ருர்கள்.

'உன் மனைவி கண்ணீர் விட்டு கலங்குகின்ருள்' என்பதை நேரடியாக எடுத்துச் சொல்ல மனமில்லாது—உன் இல்லத்தின் பக்கம் சென்றேன். ஒரு மயில் கண்ணீர் விட்டு, கலங்கிய வண்ணம் நின்றிருந்தாள். அது நின் மனையாட்டிதானு என்று கேட்டார்களாம்! நேரடியாகச் சொல்லாமல் புலவர்கள், உட்கருத்தாக வைத்துச் சொன்னுர்கள்!

இப்போது பொது சிந்தனை வளர்ந்து விட்டது! தனிப்பட்டவர்கள் அறிந்ததை, தனிப்பட்டவர்களுக்கு அறிவிக்கின்ற முறை கடந்து, அறிந்த உண்மைகளை உலகறிய, மக்களுக்கு எடுத்துச் சொல்லுகிருர்.

இப்போதுள்ள சமுதாயத்தின் நடவடிக்கையை பார்க்கிற போது, நீதி குறைந்திருக்கிறது-பலரை வற்புறுததும் தன்மை அதிகமாகியிருக்கிறது.

ஏழை அழுகிருன் என்ருல், அவனைப் பார்த்து ஏன் அழுகிருய் என்று கேட்டு, அவன் துயரைத் துடைக்கிருேம். ஏன்?

சேற்றிலே பசு அழுந்திக் கிடக்கிறது, வெளியே வர முடியாமல் தவிக்கிறது என்ருல், பேசும் சக்தியற்ற உயிர்ப் பிராணி துன்பப்படுவதை நீக்க வேண்டு மென்று எண்ணுவதில்லை. காரணம், மனிதன் உதவியைப் பெற்று மகிழ்கிருன், 'கொடுப்பதால் நாம் மகிழ்ச்சியடைகிருேம். வாங்குவதால் அந்த ஏழை மகிழ்ச்சி யடைகிருன். அந்த மகிழ்ச்சியை நாம் காணுகின்ற போது—உதவி செய்த பலன் நமக்கு கிடைத்தது என்று, நாமும் மகிழ்கிருேம்!

அந்தக் காலத்தில் தன்னைப் பற்றி பாடிக் கொண்ட புலவர்கள் தான் அதிகம் பேர் இருந்திருக்கின்றனர், புலவர்கள், கஷ்டப்பட்டு மக்களுக்கு அறிவுறுத்தவில்லை.

மன்னர்களின் உதவியை பெறுவதற்காக மண்டியிட்டுக் கிடந்தவர்களும் அன்று இருந்தார்கள்! அறநிலையைக் காப்பாற்றுவதற்கும் புலவர்கள் இருந்தார்கள்! மன்னர்கள் அற வழியிலே இருந்து தவறுகின்ற நேரத்தில் அஞ்சாமல் எதையும் சொல்லும் ஆற்றல் படைத்தவர்களும் அன்று இருந்தார்கள்,

வாழ்க்கைப் படிப்பினை நன்கு உணர்ந்தவர்கள் இருந்தார்கள். அதுவும் உண்மை! தரணி மெச்ச வாழ்ந்தார்கள் என்பது உண்மை!

தமிழர்களின் வாழ்க்கை பிற்காலத்தில் எப்படி மாறியது? இப்போது எப்படி இருக்கிறது? டாக்டர் அவர்கள் பேசுகையில் நல்ல வாழ்க்கை வாழுங்கள். இலக்கியம் தோன்றும் என்று குறிப்பிட்டார்!

வாழ்க்கை என்பது தானும் வாழ்ந்து மற்றவர்களை வாழ வைப்பது தான் வாழ்க்கை!

ஆனல் இன்று பத்து பேர் கெட்டால்தான், தன் வாழ்க்கை செம்மை பெறும் என்ற எண்ணம் சிலருக்கு இருக்கிறது! அந்த வழியிலே தான் சமூக அமைப்பும் இருக்கிறது—பொருளாதார நிலையும் இருக்கிறது,

இயற்கை துணை நின்று, உழைப்பை உறுதுணையாக்கி, அறிவுத் துணையோடு உழைக்கின்ற உழைப்பு அந்த உழைப்பில் மிச்சப்படுகின்ற நேரத்திலே குறைந்த உழைப்பில் அனுபவித்த பலனை மற்றவர்களுக்கும் அளிக்கின்ற மனம் வேண்டும், அது தான் வாழ்க்கை!

வாழ்க்கை என்ருல் தேவைகள் நிறைவுற்றிருக்க வேண்டும்!

வண்டி இழுக்கிற வரதன் வாடுகிருன், வண்டியிலே இருப்பவன் சுகமாக வாழ்கிருன் என்ருல் இதை அடுக்கு மொழி என்று சிலர் கேலி பேசுகிருர்கள். வண்டி இழுக்கிற வரதனைப் பார்த்து எப்படி இருக்கிருய் என்று கேட்டால ஏதோ இருக்கிறேன் என்று கூறுவான். இருப்பது வாழ்க்கை அல்ல! இருக்கிருன் என்ருல் மற்றவர்கள் மதிக்கத் தக்க விதத்திலே வாழ வேண்டும்! 'பாவி! இவனும் இருக்கிருனே' என்னும் விதத்திலே வாழக் கூடாது!

தமிழர்கள் நல்ல வாழ்க்கை முறைகளை கையாண்டார்கள். துயர் இல்லா திருந்தார்கள். நிறைவுற்ற வாழ்க்கை வாழ்ந்தார்கள். அதனல் தான் அக்காலத்திலே உள்ள புலவர் ஒருவர் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடினுர், தம்மைப் போலவே எல்லா நாட்டினரும் இருப்பார்கள் என்று எண்ணியதால் தான், எங்களுக்கு, எல்லா ஊரும் எங்கள் ஊர் தான் என்று அவ்வாறு சொன்னுர்,

ஆனல் பிற்காலத்தில் வந்த உறவினர்கள் இருப்பதைக் கெடுக்க வந்தார்களே தவிர, கொடுக்க வரவில்லை, நள்ளிரவு கள்ளர்களுக்கும் இவர்களுக்கும் பெயரில் தான் மாற்றம், செய்கையில் மாற்றம் ஏதும் இல்லை என்றே நான் கருதுகிறேன். பிற்காலத்திலே வந்தவர்கள் புதுவழி என்று சொல்லிக் கொண்டு தவருன வழியிலே சென்றனர்.

பழந்தமிழர்கள் கடவுள் பக்தியில் குறைந்தவர்களாக இருந்தனர் என்று சிலர் கூறுகிறார்கள். பழந்தமிழர்கள் கடவுள் பக்தியிலே அழுத்தமான நம்பிக்கை வைத்துக் கொண்டிருந்ததால் தான், சிறந்து வளங்கிய வாழ்க்கையின் தரம் குறைந்தது! ஆகவே தான் அந்தக் காலத்தில் பெரும்பாலும் கடவுட் காதைகளாகவே இயற்றப்பட்டன!

ஆனல் திருமூலர் என்னும் புலவர் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று பாடினுர். இலக்கிய தமிழர் சமுதாயம் பேதமற்ற, வேறறுமையற்ற சமுதாயமாக, சுரண்டலற்ற சமுதாயமாக விளங்கி யிருக்கிறது!

எப்படியாவது வாழ வேண்டும், வாழ்வதற்கு இன்னின்னது தேவை என்று எண்ணம் இப்போது தோன்றி விட்டதால் தான் இலக்கியத்திற்கும், வாழ்க்கைக்கு உள்ள தொடர்பு அற்றுப் போய் விட்டது!

பழந்தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்று கூறுவதால பழந்தமிழர்கள் போல் இன்று வாழ இயலுமா? அன்றிருந்த பழந்தமிழர்கள் வேட்டையாடச் சென்றார்கள்—அப்போது ஆண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்களுக்கிடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. அப்படிப்பட்ட வாழ்க்கையை இப்போது வாழச் சொல்லுகிறீர்களே, இது அறிவுடைமையாகுமா என்று சிலர் பேசுகிருர்கள்.

இப்படி இப்படி யெல்லாம் பழந்தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பது, மக்களுக்கு அறிவூட்டி, அவர்கள் வாழ்ந்த செம்மையான வாழ்வை நாமும் வாழ வேண்டும் என்பதற்காகத் தான் வலியுறுத்துகிறார்கள்.

அந்தக் காலத்திலே வாழ்ந்தவர்கள், இன்று போல் இல்லை. சிகை வளர்ந்திருந்தது! இன்று எல்லோரும் கிராப்பை எடுத்து விட்டு.சிகை வளர்த்துக்கொள்ள முடியுமா?

அன்று, சட்டை போடாமல், இருந்தார்கள். அகன்ற மார்பு காட்டி, போர்க்களத்திற்கு செல்லும் வீரர்கள் போல் நடை போட்டார்கள். இன்று அப்படி இருக்க முடியுமா?

அன்று வாழ்ந்தவர்களின், இடுப்பிலே எப்போதும் உடைவாளை வைத்துக் கொண்டிருந்தார்கள், வீரத்தோடு ஒன்றியவர்களாக அன்று வாழ்ந்தவர்கள் இருந்தார்கள்? தேவையற்ற காரியங்கள் அன்று நடை பெற்றிருக்கின்றன. ஆகவே அவைகள் அப்படியே இன்றும் இருக்க வேண்டுமென்பதல்ல! அன்று வாழ்ந்தவர்களின் அடிப்படைக் கொள்கைகளைத்! தான் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர புறத் தோற்றம் முக்கியமல்ல! ஆகவே தான் அன்று வாழ்ந்த புலவர்கள் அகம்—புறம் என்று பாடினுர்கள். அகத்திலே இருப்பதை புறத்திலே பார்க்க முடியாது! பழந்தமிழர்களின் அடிப்படை கருத்தை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்!

அந்தக் காலத்திலே வாழ்ந்த ஆடவன், இல்லக் கிழத்தி என்றும், காமக் கிழத்தி என்றும், பரத்தை என்றும் மூன்று பெண்களை வைத்திருந்தான். அந்தக் கால இலக்கியமும் இலக்கணமும் இதை ஏற்றுக்கொண்டிருக்கலாம். இது இப்போது இந்தக் காலத்திற்கு ஒத்து வருமா? இந்தக் காலத்தில் ஒரே பெண்ணேடு தான், எத்தனை ஆண்டுகளானுலும் அவளோடு வாழவேண்டும்.

"கள் குடிப்பது தீது என்று சொல்லப்படுகிறது" பழந்தமிழர்கள் குடிப்பதையே பெரிய கலையாகக் கொண்டிருந்தனர், இதற்கு சான்றுகள், சங்க இலக்கியங்களிலே ஏராளமாக இருக்கின்றன!

சங்க இலக்கியத்திலே கள் குடிக்கலாம் என்று சொல்லியிருக்கிருர்கள் என்பதற்காக ஆளுக்கொரு கோப்பையை எடுத்துக் கொண்டு குடிக்கச் சென்று விடுவது தவறு. அது வல்ல இலக்கிய வாழ்க்கை! மற்றவர்களை கெடுக்கக் கூடாது. உழைத்துப் பிழைக்க வேண்டும் இதைத் தான் நல்ல வாழ்க்கை என்று சொல்ல முடியும்! ஆகையால் வாழ்க்கை எப்படி அமைய வேண்டும்? இலக்கியததிலே இருந்து எந்த விதமான கருத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று ஆராய்ந்து பார்த்து, அந்தக் கருத்தினை மனதிலே கொண்டு, அதனுடைய துணையால் வாழ்க்கையை செம்மையாக்கிக் கொள்ள வேண்டும்! இப்படி வாழ்ந்தால தான இலக்கியத்திற்கு மதிப்பு கொடுப்பதாகும், அன்று வாழ்ந்த தமிழர்களின் புகழுக்கு ஏற்றமளிப்பது போலாகும்!

(8-ம் பக்கம் பார்க்க)

சுடுகாட்டுச் சாம்பல்

பி. எஸ். இளங்கோ

அந்தப் பதவியும், அதிகாரமும் நாட்டின் நன்மைக்காக, நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகப் பயன்பட வேண்டும்! இதைச் செய்பவன் தான் மனிதனாவான் என்ற கருத்து அவன் உள்ளத்தில் பதிய ஆரம்பித்தன!

அத்தியாயம் 29

"அத்தான்! நாம் என்றுமே கள்ளக் காதலர்கள் தானா?"

"கள்ளக் காதலில் இருக்கும் இன்பம், வேறு எதிலிருக்கும் கண்ணே!"

"திருடர்களைப்போல் சந்திப்பதும், பயந்து பயந்து வாழுவதும் எனக்கு கொஞ்சம் கூட பிடிக்கவில்லை அத்தான்!"

"நாம் மட்டும் திருடர்களைப் போல் பயந்து பயந்து வாழவில்லை, நாடே அந்த கதியில் தான் இருக்கிறது!"

முன் கதைச் சுருக்கம்

பாண்டியன் என்னும் ஒரு இலட்சிய இளைஞனும், அவனுடைய நண்பர்களும் நாட்டின் மீது பற்றும் பாசமும் கொண்டு, தாயகத்தை மீட்கும் பணியிலே ஈடுபட்டுக் கிடந்தார்கள்!

வீர பாண்டியன் தலைமையில் பொது மக்கள் பெரும் கிளர்ச்சியில் பங்குகொண்டு தாயகத்தை மீட்க புறப்பட்டனர்! போலீஸ் அதிகாரி அருமைநாயகம் இந்தக் கிளர்ச்சியை அடக்குமுறையால் ஒடுக்கி பாண்டியனையும், அவனுடைய நண்பர்களான வேலழகன், முத்தழகன் போன்றவர்களையும் கைது செய்து சிறைக் கோட்டத்திற்கு அனுப்பினார்!

போலீஸ் அதிகாரி அருமைநாயகத்தின் மகள் வேல்விழி, இனம் தெரியாத ஒரு பாசத்தால் பாண்டியனை சிறையிலிருந்து தப்பிக்க வைக்கிறாள்! பாண்டியன் தப்பி ஓடி விட்டான் என்ற செய்தி போலீஸ் அதிகாரிகளுக்கு பெரும் திகிலும் திகைப்பும் ஏற்படுகின்றன! அவனை கண்டு பிடிக்க போலீஸ் பெரும் முயற்சி செய்கின்றது!

இதற்கிடையில் அருமைநாயகத்தின் மருமகன் சுந்தரத்திற்கும், வேல்விழிக்கும் கட்டாயத் திருமணம் நடைபெறுகிறது! தாலி என்னும் அடிமைச் சாசனத்தால் பாசத்தை வளர்க்க முடியாதல்லவா? சுந்தரத்தை வேல்விழி வெறுத்து ஒதுக்கித் தள்ளுகிறாள்! பாண்டியனோடு வாழத் தீர்மானிக்கிறாள்! இந்த முடிவின் பேரில் வேல்விழியும், பாண்டியனும் ஊரை விட்டே ஓடி விடுகின்றனர்!

தப்பி விட்ட பாண்டியனையே போலீஸ் துரத்தி வண்ணம் இருக்கிறது! ஒரு நாள் போலீசாரிடம் பாண்டியன் பிடிபடுகின்ற நேரத்தில், போலீஸ்காரர்களை துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தி விட்டு ஒரு காட்டுப் பகுதிக்கு ஓடிவிடுகிறான்! அங்கே ஒரு பெரியவரின் குடிசையில் பாண்டியனும், வேல்விழியும் தங்குகிறார்கள்!

இந்த சந்தர்ப்பத்தில் சிறையில் வாடிக் கிடந்த வேலழகனும் முத்தழகனும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வெளியே வந்து விடுகிறார்கள்! வேலழகன் இராணுவத்தில் சேர்கிறான்! சில பல ஆண்டுகளுக்குப் பிறகு இராணுவத் தலைமை அதிகாரியின் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுகிறான்!

பெரியவரின் குடிசையில் தங்கி இருந்த பாண்டியன் அந்தக் காட்டுப் பகுதியில் ஒரு பெரிய பாதாள சுரங்கத்தை ஏற்படுத்தி அங்கே ஒரு போட்டி சர்க்காரையும் அமைக்கிறான்!

இது ஆட்சியாளரைக் கதிகலங்க வைக்கிறது! போட்டி சர்க்காரை ஒழிக்கவும், விடுதலை உணர்ச்சியை நசுக்கவும் இராணுவம் வரவழைக்கப்படுகிறது! கர்னல்தாமஸ் கலகத்தை அடக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுகிறான்!

என்ன தான் இராணுவத்தில் பெரும் பதவி கிடைத்து விட்டாலும், அவனுடைய உள்ளத்தில் அணையாது கொழுந்து விட்டெரியும் விடுதலைத் தீயை அணைக்க முடியுமா? நாட்டின் மீது கொண்டுள்ள பாசத்தால் தானே அவன் இராணுவத்தில் சேர்ந்ததும்! இந்த சந்தர்ப்பத்தை கர்னல் தாமசாக இருந்தும் வேலழகன் பயன் படுத்திக் கொள்ள தவறவில்லை!

மறைந்து மாயமாய் வாழும் பாண்டியன் போலீஸ் அதிகாரி அருமைநாயகத்தின் பாதுகாப்பில் தான் இருக்க வேண்டும். அருமைநாயகத்தின் துணையாலும், தைரியத்தாலும் தான் பாண்டியனும் இந்த பெரும் கிளர்ச்சியை செய்து வருகிறான் என்று கர்னல்தமஸ் ஒரு பெரும் வதந்தியை கிளப்பி விட்டு, அந்த வதந்தியை வைத்துக் கொண்டு போலீஸ் அதிகாரி அருமைநாயகத்தைப் கைது செய்து காவலில் வைக்கிறான்!

இந்த சந்தர்ப்பத்தில் போட்டி சர்க்கார் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுகிறது! ஜனவரி மாதம் 1[illegible]-ம் தேதிக்குள் நாட்டை மீட்க வேண்டும், அதற்கான பணியில் இந்தப் போட்டி சர்க்கார் ஈடுபட வேண்டும் என்பது தான் அந்தத் தீர்மானமாகும்!

அந்த நேரத்தில் இராணுவ தளபதி கர்னல் தாமசுக்கும் விடுதலை உணர்ச்சி பொங்கி எழ ஆரம்பித்தது! இன்னும் இருபத்தி நான்கு மணி நேரத்தில் தாயகத்தின் அடிமைத்தளை சுக்கு நூறாக நொறுங்க வேண்டும்! நமது விடுதலைக் கொடி பாரளாவ பறந்து பட்டொளி வீச வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறான்!

பதவியும், அதிகாரமும் ஒருவனுக்குக் கிடைப்பது பெரிதல்ல!

"நாடு, நாடு.. எந்த நேரமும் உங்களுக்கு நாடுதான்!"

"நாடு வாழ்ந்தால்தானே நாம் வாழ முடியும்?"

"அந்த நாடு எப்போ வாழப் போகிறதோ. நாம் எப்போ உருப்படப் போகிறோமோ!"

"நாளைக்கே அந்த நாடு வாழப் போகிறது—நாளைக்கே நம்முடைய வாழ்வும் மலரப் போகிறது!"

"முப்பது வருஷமாகத்தான் நாடும் வாழுகிறது—நாமும் வாழுகிறோம்! உங்களுடைய கற்பனைக்கும், கனவுக்கும் என்ன பஞ்சம்?"

"இல்லை சுந்தரி! நாளை காலை உதயசூரியன் தோன்றுகின்ற அந்த நேரத்தில் இந்த நாடும் சுதந்திரமடையப் போகிறது! நாமும் சுதந்திர வீரர்களாய் வானத்தில் கீதம் பாடி இன்ப லோகத்தில் பறக்கப் போகிறோம்!"

"போதும், போதும் என்னை ஏமாற்றியது!"

"இல்லை! இனி உன்னை ஏமாற்றமாட்டேன்! நாளை காலை நான் ராஜா நீ ராணி"

"ஏதாவது கதை எழுதப் போகிறீர்களா?"

"ஆமாம்! கதைதான் எழுதப் போகிறேன்! இந்த நாட்டின் சரித்திரத்தை நாளைக் காலையில் திருத்தி எழுதப் போகிறேன்!"

"அத்தான்! கற்பனை கொஞ்சம் அளவோடு இருக்கட்டும்!"

7-ம் பக்கம் பார்க்க

மணவழகர் மன்றத்தினரின் முத்தமிழ் விழா !

மணவழகர் மன்றத்தாரின் முத்தமிழ் விழா கடந்த 5, 6, 7 தேதிகளில் சென்னை கோகலே மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது!

முதல் நாள் நிகழ்ச்சி துவக்கத்தின்போது தோழியர் ஜி முத்து லட்சுமி நாட்டுப் பண் பாடினர். வழக்கறிஞர் பு. ரா. கோகுல கிருட்டிணன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில் மணவழகர் மன்றத்தாரின் பணிகளைக் குறித்து கூறினர்.

மேலும் அவர் பேசுகையில், தமிழ் ஆரம்பிப்பதே 'அ' எழுத்தில்! வள்ளுவரின் குறள் ஆரம்பிப்பதும் அகர! முதல' என்னும் குறளில் தான், அந்தக்குறளின் முதல் எழுத்தும் 'அ'! இக்கூட்டத்திறகு தலைமைவகிக்க இருக்கும் அனந்த நாராயணன் நீதிபதி அவர்களின் பெயரின் முதல் எழுத்தும் 'அ'! விழாவினை துவக்கி வைக்க இருக்கும் மேயர் அவர்களின் பெயரின் முதல் எழுத்தும் அ! இங்கு பேச வந்திருக்கும் டாக்டர் அவர்களின் பெயர் 'அ'வுகதைப் பின்னாலே ஆரம்பிக்கிறது.

சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் கலந்து கொண்டு நம்மையெல்லாம் மகிழ்ச்சியில் திளைக்க வைக்க இருக்கிற அண்ணா அவர்களின் முதல் எழுத்தும் 'அ'! என்றும் கூறி, முத்தமிழ் விழாவின் சிறப்புக் குறித்து பேசி அனைவரையும் வரவேற்றார்.

விழாவினை துவக்கி வைத்த மாநகராட்சி மன்ற தலைவர் திரு. அப்துல்காதர் அவர்கள் பேசுகையில்:—

தமிழ் வளர்ச்சிக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

விழாவிற்கு உயர் நீதிபதி திரு. அனந்த நாராயணன் அவர்கள் தலைமை வகித்தார்.

பின்னர் "இயற்றமிழ்" என்னும் தலைப்பிலே டாக்டர் அ. சிதம்பரநாதனார் அவர்கள் பேசுகையில் மேலை நாட்டிலே உள்ளவர்கள் தமிழை போற்றுகிறார்களென்றும், மொழி இலக்கணமும், இலக்கியமும் அந்தந்த காலத்து மரபு, பழக்க வழக்கங்களுக்கு ஒத்ததாக இருக்க வேண்டுமென்றும், அந்தக் காலத்தில் உயர்வு நவிற்சியின்றி, மக்கள் மத்தியிலே காணப்படும் உண்மையான சம்பவங்களை கவிதைகளிலே படம் பிடித்துக் காட்டினார்களென்றும், திரைத் தமிழ் இப்போது முன்னேறி வருகிறதென்றும் கூறினர்.

இறுதியில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசுகையில் மனப் புரட்சி பற்றியும், மறுமலர்ச்சி பற்றியும், வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பு பற்றியும் அரிவுரையாற்றினர்.



வழக்கறிஞர் பு. ரா. கோகுல கிருட்டிணன் முத்தமிழ் விழாவின் துவக்கத்தில் வரவேற்புரை நிகழ்த்துகிறார்!

இரண்டாம் நாள் நிகழ்ச்சி

மணவழகர் மன்றத்தாரின் முத்தமிழ் விழா இரண்டாம் நாள் விழாவிற்கு டாக்டர் திரு. ரத்னவேலு சுப்ரமணியம் அவர்கள் தலைமை வகித்தார்.

லட்சிய நடிகர் எஸ். எஸ் ராஜேந்திரன் அவர்கள் நாடகக்கலையின் சிறப்பினை குறித்து பேசினர்.

அடுத்து திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் மறுமலர்ச்சிக் கவிஞர்களின் லட்சியக் கவிதைகளை கூறி அழகான விளக்கமளித்தார். மேலும் அவர் பேசுகையில் கவிஞர்கள் தங்கள் கவிதைத் திறத்தால் மக்களை நிகழ்காலத்திற்கும், எதிர்காலத்திற்கும் இழுத்துச் செல்பவர்கள் என்றும் கூறினர்

பின்னர் டி. கே. சீனுவாசன் அவர்கள் பேசுகையில் இப்போது புரட்சி தேவையென்றும், குறளின் சிறப்பு குறித்தும், பேசினர்.

இறுதியில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்கள் "இலக்கிய இன்பம்" என்னும் தலைப்பில் நீண்டநேரம் விரிவுரை யாற்றினர்.

மூன்றும் நாள் நிகழ்ச்சி

முத்தமிழ் விழாவின் மூன்றும் நாள் விழாவுக்கு திருமதி சௌந்தரம் கைலாசம் அவர்கள் தலைமை வகித்தார்.

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் "பழந்தமிழகம்" என்னும் தலைப்பில பேசினர். கவிஞர் கண்ணதாசன் அவர்கள் "பாத்திரப் படைப்பு" என்னும் தலைப்பிலும், "இலக்கிய வாழ்வு" என்னும் தலைப்பில் திரு சா. அமீது எம். ஏ. அவர்களும் பேசினர்!

குறிப்பு: முத்தமிழ் விழாவில் சொற்பொழிவாற்றிய திருவாளர்கள் இரா நெடுஞ்செழியன், கலைஞர் மு. கருணாநிதி, கவிஞர். கண்ணதாசன், டி. கே, சீனுவாசன், நாஞ்சில் கி. மனோகரன் ஆகியோரின் முழுப் பேச்சு அடுத்த வார இதழில் வெளியிடப்படும்!

6-ம் பக்கத் தொடர்ச்சி

பல ஆண்டு காலமாக கற்பனையாக, கதையாக என் உள்ளத்தில் உருவெடுத்ததுதான் இது! நாளை அந்த கற்பனை, உருவம் பெறப் போகிறது!"

"உளராதீர்கள்! அந்த உளறலையெல்லாம் மேடையில் வைத்துக் கொள்ளுங்கள்!"

சுந்தரி! நான் பைத்தியக்காரனல்ல! இதோபார் என்று (இராணுவ வீரர்களுக்கு போட இருக்கிற உத்திரவைப் படித்துக் காட்டினான்!)

"அத்தான் என்றால் அத்தான் தான்!"

இராணுவத் தளபதி கர்னல் தாமசும், அவனுடைய காதலி சுந்தரியும் எங்கேயோ ஒரு உலகத்தில் மிதந்துக் கொண்டிருந்தார்கள்! ஒரு பத்து நிமிடம் வரையில் பேச்சில்லை! இருவருமே கன்னத்தைத் துடைத்துக் கொண்டு நினைவுலகத்திற்கு வந்தார்கள்!

இராணுவப் புரட்சி! நினைத்தாலே பயங்கரமாக இருக்கிறது! என்னதான் கட்டுப்பாட்டுடன் புரட்சி செய்தாலும் விளைவு பயங்கரமாக இருந்தால், நிலைமை மோசமாக மாறிவிட்டால் எப்படி சமாளிப்பது என்ற யோசனையில் ஆழ்ந்தான்!

இருட்டுக்குப் பின்தான் ஒளி வரும், துன்பத்திற்கு பின்தான் சுகமும் கிடைக்கும்! என்ன விளைவுகள் ஏற்பட்டாலும், நாட்டுக்காக, நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக அதை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்.

கர்னல் தாமசின் உள்ளம் அலைகடலில் அகப்பட்ட துரும்பைப் போல் அலைக்கழிந்து கொண்டிருந்தது!

ஒரு பத்து நிமிடத்திற்கெல்லாம் ஒரு முடிவுக்கு வந்தவரைப் போல் இராணுவ வீரர்களுக்கும், இராணுவ அதிகாரிகளுக்கும் டெலிபோன் மூலம் அழைப்பு விடுத்தான்!

(தொடரும்)

இப்போதுள்ள கல்வி முறையால் இலக்கியம் வளர்ச்சி பெற முடியாது!

(அண்ணா பேச்சு)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்று கூறினால் சிக்கல் வரும் என்று கூறுகிறார்கள்! தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும்! இங்கே அமர்ந்திருக்கும் நீதிபதி அவர்கள் வழக்கு மன்றத்தில் தமிழிலேயே தீர்ப்பு எழுதி படிக்க வேண்டும்—அந்த நாளை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்!

டாக்டர் அவர்கள், தனித் தமிழ் வேண்டுமென்று கூறினார்! இப்போது இருக்கின்ற துரைத்தனத்தில் தமிழர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் ஆள்கிறார்கள். தனித்தமிழ் ஆட்சியிலே நீக்க வேண்டுமென்று சொல்லி வருவது கண்டு வெட்கப்படுகிறேன்! வேறு நாடுகளிலே இது போன்ற நிலை இல்லை!

ஆங்கிலம் பேச எழுதத் தெரியாத பல நாடுகளில், அந்த நாட்டின் தாய் மொழியே ஆட்சி மொழியாக இருக்கின்றன, ஆங்கிலம் வளர்ந்திருக்கும் பல நாடுகளில் கூட, அந்தந்த நாட்டின் தாய் மொழியைத் தான் ஆட்சி மொழியாக்கி இருக்கிறார்கள், எஸ்கிமோக்கள் வாழ்கின்ற பகுதியிலே கூட அவர்களின் தாய் மொழி தான் ஆட்சியிலே இருக்கிறது! அவர்களை பார்த்து, அவர்கள் வழி, பின் பற்றினால் பாதி பிரச்னை தீர்ந்து விடும்! இங்கே இருக்கின்ற துரைத்தனத்தாரை, 'தமிழிலே எழுதுகிறோம் அனுமதி தாருங்கள், என்று கேட்கும் நிலைக்கு இருக்கிறோம்!

தமிழர்கள் என்றால் வாதாடலாம்—பகைவர்கள் என்றால் துச்சம் என மதிக்கலாம்! 'என் கொடியின் கீழ் நீ நிற்கிறாய், நீ சொன்னால் அதை நிறைவேற்ற வேண்டுமா? இப்போது இருப்பதை உன்னால் மாற்ற இயலாது' என்று சொல்லுவதைப் போல் இங்கே இருக்கின்ற துரைத்தனத்தார் தமிழை ஆட்சி மொழியாக்க முடியாது என்று கூறுகிறார்கள். ஆங்கிலம் தான் இன்று வழக்கிலே இருக்கின்றன! பேசத் தெரிந்தவர்கள் ஆங்கிலம் பேசுகிறார்கள். பாடத் தெரிந்தவர்கள் வட—மொழி சங்கீதத்தைப் பாடுகின்றார்கள், ஆகவே மொழி உரிமையை இழந்து விட்டு இன்னொரு இனம் சும்மா இருக்காது!

சின்னஞ் சிறிய நாடு—அயர்லாந்து! ஆங்கிலேயர்களின் ஆட்சியிலே இருந்த காலம்! சுயாட்சி பெற வேண்டுமென்ற எண்ணம் பிறந்து, விடுதலைக் கொள்கை வித்தூன்றிய காலத்தில், முதலில் தோன்றியது புரட்சிக் கழகமல்ல! ஐரிஷ் மொழியை வளர்க்கும் கழகங்கள் தான் முதலிலே தோன்றின!

ஐரிஷ் மொழி பேசுகின்றவர்களே, ஐரிஷ் மொழியிலே என்ன இருக்கிறது, இலக்கியம் இருக்கிறதா என்றார்கள். மொழி உணர்ச்சிக் கொண்டவர்கள் 'ஆங்கிலத்திலே இலக்கியம் இருக்கலாம். ஐரிஷ் மொழியிலே இலக்கியம் இல்லாமல் இருக்கலாம், ஆனால் உரிமை உணர்ச்சி கிடைக்கும்' என்றார்கள். மொழி உணர்ச்சி வலுப்பெற்ற போது ஆங்கில துரைத்தனத்தார். உங்களுக்கு ஐரிஷ் கொடி வேண்டுமா, எங்களது ஆனந்தவாழ்வு வேண்டுமா, கேட்ட போது ஐரிஷ் விடுதலைத் தலைவன் டிவேலரா, அடிமை வாழ்வில் கிடைக்கும் ஆனந்தம் தேவை இல்லை. எங்களுக்கு ஐரிஷ் கொடி தான் வேண்டுமென்றார். அதே போல் தான் நாம், நமது மொழி ஆட்சி மொழியிலே இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். தனித் தமிழ் வேண்டுமா என்று நம்மைப் பார்த்துக் கேட்கும் துரைத்தனத்தாருக்கு நாம் சொல்லும் பதில், புருவத்தை நெறிப்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை!

தமிழ் இப்போது வேகமாக, முன்புள்ள நிலையை அடைவதற்கு வழிவகைகள் ஏற்படடு வருகின்றன. பிற மொழி கலப்பு மாறி, தனித் தமிழ் பேச்சு வழக்கில் நிறைய வந்து கொண்டிருக்கின்றது.

நான் மட்டும் இப்போது நல்ல தமிழ் பேசவில்லை. இப்போது பலர் நல்ல தமிழிலே பேசி வருகிறார்கள். திரைத் தமிழ் வளர்கிறது என்று டாக்டர் அவர்கள் கூறினார்கள்.

உண்மையிலேயே திரைத்தமிழ் வளர்ந்து கொண்டு தான் வருகின்றது. படத்தில் பத்து ஆண்டுகளுக்கு முன் காதலனும் காதலியும் சந்தித்து உரையாடுகின்ற கட்டமானால், காதலி—காதலனைப் பார்த்து 'சுவாமி' என்று வசனம் பேசுவாள்! இன்று 'சுவாமி' என்று பேசினால், பார்ப்பவர்கள் இது என்ன கோயில் 'சீனா' என்பார்கள்! இது எப்படி மறைந்தது? எப்படி இருந்தது—இப்போது எப்படி மாறிற்று? இன்று கண்ணாளா, கரும்பே, தேனே, மானே பெண்ணிலவே என்று பேசுகிறார்கள். இந்த அழகிய தமிழ் எப்படி வந்தது."

'சுவாமி' என்று பேசினால் தொழுகையிலே பேசுகின்ற பேச்சாகி விட்டது! ஆண்டவனை தொழுதாலும், வரம் தரா விட்டாலும் கோபிக்காமலாவது இருக்கலாம்! ஆகவே இன்று திரையில் அன்பே, ஆருயிரே என்ற அழகிய தமிழ், பழந்தமிழ் பேசப்படுகிறது!

ஒரு திங்களுக்கு முன் துரைத்தனத்தார் கூட்டிய கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன். கூட்டத்தில் 'பேரூர்தி நிலையம்' என்று ஒருவர் பேசும் போது கூறினார். உடனே ஒரு காங்கிரஸ் உறுப்பினர் எழுந்திருந்து பேரூர்தி நிலையம் என்பது—இது என்ன தமிழா? இது யாருடைய வாயில் நுழையும் என்று கூறினார். நான் பேசுகிற போது குறிப்பிட்டேன் இது நுழைகின்ற வாய் நிறைய இருக்கின்றன என்று.

நான் படித்த காலத்தில் தீபஸ்தம்பம் என்று சொல்லுகிற போது, அதிலே எத்தனை கம்பீரமாக இருந்தது! அதை சொல்லிப் பார்ப்பதிலே ஒரு மகிழ்ச்சி இருந்தது! என் மகனிடத்திலே தீபஸ்தம்பம் என்றால் என்னப்பா அது என்கிறான்! லைட் ஹவுஸுக்கு பெயர் தீபஸ்தம்பம் என்றால், அவன் சிரித்து விட்டு கலங்கரை விளக்கமா என்று கூறுகிறான். தீபஸ்தம்பம் என்றால் அவனுக்கு புரியவில்லை, கலங்கரை விளக்கம் என்றால் தான் புரிகிறது! இது நான் கற்றுக் கொடுத்தது அல்ல-காலம் கற்றுக் கொடுத்தது! இது எப்படி ஏற்பட்டது? இது தான் மறுமலர்ச்சி வாயிலாக ஏற்பட்ட மொழி உணர்ச்சி!

பதினைந்து ஆண்டுகளுக்குமுன் இப்படி ஒரு கூட்டம் நடைபெற்று, நண்பர் கோகுல கிருஷ்ணன் வரவேற்று பேசுகிற போது, எப்படி பேசியிருப்பார்?

மகாஜனங்களே! சகோதர சகோதரிகளே! உங்களையெல்லாம் சந்திக்கிற வாய்ப்பு கிடைத்தது பெரும் பாக்கியம். நான் தன்யனானேன்! இப்பொழுது உங்கள் மத்தியிலே ஸ்ரீமான் அண்ணாதுரை அவர்கள் பிரசங்கம் செய்வார் என்று கூறியிருப்பார்! இப்பொழுது சபை—அவையாகிவிட்டது! நாடு அரசாகி விட்டது! நாடு, விடுதலை, கிளர்ச்சி என்கின்ற சொற்கள் வழக்கிலே வந்துவிட்டன! இப்படி வருமென்று யார் கண்டார்கள்! யாரும் நினைக்கவில்லை! இந்த மறுமலர்ச்சி ஏற்பட்டபின் சிலருக்கு அச்சம் ஏற்பட்டது! தூயத் தமிழ் இன்று வென்று விட்டது! நிலையாக நின்று விட்டது!

ஆகவே, துணிந்து நம்பிக்கையோடு தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று எடுத்துரைக்க வேண்டும். புதிய புதிய சொற்களை நாம் இலக்கியத்திலே இருந்து எடுத்தாள வேண்டும். புதிய சொற்கள் இலக்கியத்தில் நிரம்ப இருக்கின்றன. வழக்கு மன்றங்களுக்கான சொற்கள் சிலப்பதிகாரத்தில் வழக்குரைப் பகுதியில் இருக்கின்றன! அரசாட்சிக்குரிய சொற்கள் மணிமேகலையில் இருக்கின்றன!

இல்லையென்று கூறுகின்றவர்களுக்கு இருக்கிறதென்று காட்ட துணிந்தால் நிச்சயமாக தமிழ் தனித்து இயங்கும். தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்று கூறுகிற போது தமிழ் செல்வாக்கு இழந்து விடும் என்று ஆட்சியாளர்கள் கூறுவதற்கு காரணம், தமிழ் ஆட்சி மொழியானால், இப்போது இருக்கிற வடமொழி செத்து விடும் என்ற அச்சம் தான், தமிழ் கெட்டு விடும், கெட்டு விடும் என்று கூறுவதற்கு காரணம்! இதற்கு எடுத்துக்காட்டாக ஒன்று சொல்லுவேன் — வடமொழி இப்போது பேச்சு வழக்கிலே இல்லை லத்தீன் மொழி எழுத்திலே இருக்கிறதே தவிர, பேச்சில் இல்லை. வடமொழிச் சொற்களில் கருத்து இருக்கலாம், ஆனால் அது பெரும் பான்மையாரால், பேசப்படுவதில்லை. பேச்சு வழக்கிலே இல்லை,

தமிழ் மொழியில் நல்ல இலக்கியங்கள் இருக்கின்றன, தமிழர், தாய்மொழி—தமிழ் என்ற நம்பிக்கை, உறுதிப்பாடு உங்களுக்கு ஏற்பட வேண்டும். அந்த உணர்வு இல்லாத காரணத்தினால் தான் இருப்பதை விரட்டப்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் தமிழ் கெட்டு விடும் என்று அச்சுறுத்துகிறார்கள்.

எந்த மொழியிலிருந்தும் கடன்வாங்கும் நிலையிலே தமிழ் இல்லை. எப்படி துரைத்தனத்தார் மற்ற நாடுகளிலே இருந்து கடன் பெறுவதைப் போல், மற்ற மொழிகளிலே இருந்து கடன் வாங்கப்பட்டால், அந்த நிபந்தனை ஆதிக்கம்—நம் மொழியின் வளர்ச்சியை குலைத்துவிடும்! எனவே தான் நாம் தனித் தமிழ் வேண்டுமென்று குறிப்பிடுகிறோம்.

மொழி வளம், தனித் தன்மை தமிழர்க்கு இருக்கிறது. தமிழ் இலக்கியம், வாழ்க்கையோடு எல்லா வகையிலும் ஒட்டி நன்மை செய்வதை நீங்கள் பார்க்கக் கூடும். செம்மையான வாழ்க்கைக்கு வழிகாட்டியாக, இலக்கியத்தில் உருட்டி திரட்டி எடுத்ததுபோல் குறள் இருக்கிறது. வாழ்க்கையிலே ஏற்படும் ஐயப்பாடுகளை நீக்கிக் கொள்வதற்கு குறள் துணைபுரிகிறது!

குறளை, வழிகாட்டியாகக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

வாழ்க்கைக்கு திருவள்ளுவர் காட்டிய நெறியையும், புறநானூறு காட்டிய வீரத்தையும், அகத்துறை காட்டிய அன்பையும் வருங்காலத்தில் நாம் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, இதுபோன்ற மன்றங்கள் செய்யும் பணி, பாராட்டுதற்குரியது. இதற்கு நீங்கள் அதிக அளவில் ஆதரவு தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்!

சம்பளக் கமிஷன் என்னும் சதியால் சலுகைகளைப் பறித்து விடுகிறார்கள்!

துயர் துடைக்க வேண்டிய சர்க்கார் தொழிலாளர்களுக்கு தொல்லை கொடுப்பது ஏன்?

தபால் தந்தி ஊழியர்கள் கூட்டத்தில் ஈ. வெ. கி. சம்பத் பேச்சு!

சென்னை தபால்காரர்கள் சங்கத்தின் பொதுக் கூட்டம் 8-2-60ம் தேதி மாலை சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்றது!

தபால்காரர்கள் சங்கத் தலைவர் ஏ. எஸ். ராஜன் தலைமை வகித்து சம்பளக் கமிஷனின் சிபார்சு பற்றியும், அதனால் ஏற்படும் இன்னல்கள் பற்றியும் அந்த சிபார்சுகளில் கீழ்த்தர சிப்பந்திகள் படும் துயரம் பற்றியும், உயர்தர அதிகாரிகளுக்கு ஏற்படும் நன்மைகளைப்பற்றியும் விளக்கமாகவும், விரிவாகவும் பேசினார்!

பின்னர், சென்னை தபால்கார்ரர் சங்கச் செயலாளர் கிருஷ்ணனும், தந்தி—தபால் ஊழியர் சங்கச் செயலாளர் லட்சுமணனும் சம்பளக் கமிஷன் செய்தி சிபார்சிலுள்ள கேடுகளையும், மத்திய சர்க்கார் செய்துவரும் பாரபட்சச் செயல்களையும் விளக்கிப் பேசினார்!

பின்னர், சென்னை மாநில தபால்காரர் சங்க துணைத் தலைவரும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களில் முக்கியஸ்தரும், பாராளுமன்ற உறுப்பினருமான சொல்லின் செல்வர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசியதாவது:—

அன்புள்ள தலைவர் அவர்களே, நண்பர்களே! பெரியோர்களே!

நீங்களெல்லாம் இங்கு நீண்ட நேரம் எனக்காகக் காத்திருந்து, பொறுமை காட்டியதற்காக உங்களிடம் எனது மன்னிப்பை முதலில் கேட்டுக்கொள்கிறேன்!

நான் வேறொரு கூட்டத்தில் முன்பே ஒப்புக் கொண்டபடி அங்கு சென்று விட்டு வருவதற்கு இவ்வளவு தாமதமாகிவிட்டது! நான் பாராளுமன்றக் கூட்டத்திற்கு நாளை செல்கிறேன். அங்கு செல்வதற்கு முன் இங்கு உங்களிடம் பேசவேண்டுமென்று வற்புறுத்தியதால் இங்கு வந்து பேச ஒப்புக்கொண்டேன்.

தலைவர் ராஜன் அவர்கள் உங்கள் குறைகளை மிகவும் அழகாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறினார்!

அவர் எடுத்துக் கூறும்போது ஒவ்வொரு குறைகளினால் ஏற்படும் தீமைகளை எடுத்துக் கூறி, அவைகளை நீக்குவதற்கு நான் பாராளுமன்றத்தில் போராட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார் அவர் உங்கள் குறைகளைச் சொல்லி அதிலுள்ள நியாயங்களை என்னிடம் கூறி விவாதிக்கும்போது. நான் பாராளுமன்றத்திலுள்ள எனது நிலையை எண்ணிக் கொண்டிருந்தேன்!

ஆனால், நண்பர் லட்சுமணன் பாராளுமன்றத்திலுள்ள எனது நிலைகளை உங்களுக்கு கூறி எனக்காக நன்றாக வாதித்தார்!

பாராளுமன்றத்தில் எனக்கிருக்கும் சங்கடங்களை, அங்கு நான் என்ன செய்யமுடியும் என்பதை நண்பர் லட்சுமணன் விளக்கினார்!

பாராளுமன்றத்தில் என்னைப் போன்றவர்கள் எல்லா விஷயங்களிலும் கலந்து பேசமுடியாது! நாங்கள் பேச வேண்டுமென்று கருதினால் 'கியூ' வரிசையில் நின்று தலைவர் சொல்லுகின்ற விஷயங்களில்தான் நாங்கள் பேசமுடியும்.

இன்று பாராளுமன்றத்தில் நாங்கள் சென்று ஏதாவது செய்கிறோமென்றால் அங்கு நன்றாகப் பேசுகின்றவர்கள் பேசுகின்ற பேச்சுகளைக் கேட்கலாம், அல்லது தூங்கலாம்.

இதைத் தவிர அங்கு போய் அதைச் செய்கிறேன் — இதைச் செய்கிறேன் என்று உங்களிடம் கூறினால் அது உங்களை ஏமாற்றுவதேயாகும்! பின் ஏன் இங்கு நாம் கூடி இந்த விஷயங்களைப் பற்றிப் பேசுகிறோம் என்றால், நாம் ஒருவருக் கொருவர் இருக்கும் நிலைமைகளைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கேயாகும்!

பாராளு மன்றத்திலுள்ள நமது பகைவர்கள், மிகவும் பலம் வாய்ந்தவர்கள். அவர்களிடம் நமது குறைகளைக் கூற நமக்கு வாய்ப்புக் கிடைக்காது! அப்படிக் கிடைத்தாலும் நாம் விரும்பும் விஷயம் பற்றி பேச முடியாது! அதுவும் நினைக்கும் போது கிடைக்காது.

என்னோடு இன்னும் 7 பேர்கள் இருந்தால் நான் தைரியமாகப் பேசமுடியும். அந்நிலை எங்களுக்கில்லையே சர்க்காரே சம்பளக் கமிஷனை நியமிக்கப் போகிறது என்று அறிவித்தவுடன், நமது நண்பர்கள் அளவற்ற ஆனந்தமடைந்தார்கள். உற்சாகம் காட்டினர். ஆர்வம் தெரிவித்து அது உடனே விசாரணை

செய்த அறிக்கை வெளியிட வேண்டுமென்று ஆர்பாட்டம் செய்தனர். அது மட்டுமல்ல, சம்பளக் கமிஷன் நியமனத்தால் தங்கள் குறைகளெல்லாம் நீங்கி தங்கள் வாழ்வு நலமுறப் போகிறதென நம்பி அகமகிழ்ந்தனர். கவலையெல்லாம் மறந்து நிம்மதியாகத் தூங்கினர். ஆனால் என்ன நடந்தது? அவர்கள் எதை எதிர்பார்த்தார்களோ அது நடக்கவில்லை சம்பளக் கமிஷன் அறிக்கை வெளிவந்தது. இருந்த நன்மைகளும் நீங்கி தீமைகள்தான் அதிகமாகியது. இந்த சம்பளக் கமிஷன் அறிக்கையால் விளையும் தீமைகளையும், சம்பளத்திலும் விடுமுறை முதலியவைகளில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களையும் நமது நண்பர்கள் நன்கு விளக்கினார்கள். இப்போது சர்க்கார் அலுவலகங்களில் பணிபுரியும் நமது நண்பர்கள், ஏன் இந்த சம்பளக் கமிஷன் வந்தது, இது வராமலிருக்கக்கூடாதா என்று நினைக்கும் அளவுக்கு அது இருக்கிறது.

சர்க்காரும், அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் ஏதாவது குறைகள் பற்றி கேட்டால், இனி சர்க்கார் அவர்களை பயமுறுத்த "இன்னொரு சம்பளக் கமிஷனை நியமிக்கிறோம்' என்று மிரட்டி அடக்கி விடுவார்கள்.

மேல் நாடுகளில் சம்பளக் கமிஷன் நியமிப்பது எதற்கு என்றால், அங்குள்ள சிப்பந்திகளின் வாழ்க்கை வசதிகளை ஆராய்ந்து, விலைவாசிகள் இருக்கும் நிலைமைகளை உணர்ந்து அவர்களுடைய கஷ்டங்களை நீக்க வழிசெய்யவே நியமிக்கிறார்கள். ஆனால் நமது இந்திய சர்க்காரோ, சம்பளக் கமிஷனை நியமித்து, இருக்கும் சலுகைகளையும் பிடுங்கி, விடுமுறை, ஓய்வு வசதிகளைப் போக்கி தொல்லை தருகிறார்கள் இருந்த உரிமைகள் பறிக்கப்படுகிறது. இருந்த சலுகைகள் மாற்றப்பட்டு விட்டது! ஆனால் நமது சர்க்காரோ, இந்த சம்பளக் கமிஷனை நியமித்த ஏதோ நன்மைகள் செய்து விட்டதாகப் பறைசாற்றுகிறார்கள். ஏதோ சிப்பந்திகளுக்கு உதவிகள் நன்மைகள் செய்துவிட்டதாக கூறுகிறார்கள்.

நம்முடைய கிராமங்களில் ஒரு பழமொழி கூறுவதுண்டு, "வலது கையால் கொடுப்பது, இடது கைக்குத் தெரியக் கூடாது" என்பார்கள். ஆனால் நமது சர்க்கார் 'வலது கையால் கொடுத்து, இடது கையால் வாங்கிக் கொள்கிறார்கள்!

தலைமை வகித்த ராஜன் அவர்கள் பல புள்ளி விபரங்களைக் கூறினார். அவர் கூறும்போது தெரிவித்தார், இந்தச் சம்பளக் கமிஷன் கீழ்த்தர சிப்பந்திகளுடைய சம்பள சலுகைகளிலும் விடுமுறை வசதிகளிலும் கைவைத்து விட்டதென்றும், உயர்தர அதிகாரிகளுடைய சம்

(10-ம் பக்கம் பார்க்க)

ஊழல் புரிந்தவர்களுக்கு உபசார விருந்து!

ஆட்சியாளரின் அதிசயப் போக்கு!

(சம்பத் பேச்சு)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பளத்திலோ, மற்ற வசதிகளிலோ தலையிடவில்லை என்று கூறினார். நம்முடைய சர்க்கார் உயர்தர அதிகாரிகள் பக்கமே எட்டிப் பார்க்காது. அவர்களைக் கண்டால் பிரதமர் நேருவும், மத்திய சர்க்காரும் அஞ்சுகிறார்கள். அவர்கள் செய்த குற்றங்களை மறைக்கிறார்கள். இதற்கு உதாரணம் தேவையானால் பல மோசடி வழக்குகளைப் பாருங்கள். அதில் பல உயர்தர அதிகாரிகள் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள். பல, ஐ. சி. எஸ். அதிகாரிகள் ஈடுபட்டிருக்கிறார்கள். இதுவெல்லாம் நீங்கள் நன்கு உணர்வீர்கள். அவர்களுக்குத் தண்டனைக் கிடைத்ததா? அதற்குப் பதிலாக அவர்களுக்கு மரியாதையும் பாராட்டுகளுமே கிடைத்தது!

சில மாதங்களுக்கு முன்பு ஒரு இன்சூரன்ஸ் சம்பந்தமாக பெரிய மோசடி ஒன்று நடந்தது. கண்டுபிடிக்கப்பட்டு, பல உயர்தர நீதிபதிகளைக் கொண்டு விசாரணை நடந்தது! அதில் பல உயர்தர ஐ. சி. எஸ், அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக நிரூபிக்கப்பட்டது! ஏன் அமைச்சருடைய பெயரும் ஈடுபட்டு அவர் விலகும் நிலை ஏற்பட்டது! சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்குத் தண்டனை கொடுக்கப்பட்டதா? இல்லை—அதற்குப் பதில் என்ன செய்யப்பட்டது?

சுமார் ஒன்னரைக் கோடி ரூபாய்க்கு மேல் மோசடி நடந்த இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேலையிலிருந்து விலகிப் போகும்படி செய்யப்பட்டது. அதுவும் ஓய்வு பெற்று பதவியிலிருந்து விலகிச் செல்லும் அதிகாரிகளுக்குக் கொடுக்கும் சலுகைகளைக் கொடுத்து அனுப்பப்பட்டது.

இதுபற்றி நமது பிரதமர் நேரு அவர்கள் பாராளு மன்றத்தில் பேசும்போது, உயர்தர அதிகாரிகள்மீது இந்த மாதிரியான குற்றச்சாட்டுகள் வந்ததற்கு வருந்துகிறேன். அவர்களுக்கு எல்லா மரியாதைகளும் கொடுத்து, கொடுக்க வேண்டிய சலுகைகளும் கொடுத்து அனுப்புகிறோம். அவர்கள் இந்த அரசாங்கத்திற்குச் செய்த சேவைகளையும் பாராட்டுகிறோம்'என்று பயந்து, தண்டிக்க வேண்டியவர்களைப் பாராட்டி, குற்றம் செய்தவர்களுக்கு மரியாதை தெரிவித்து சலுகைகள் கொடுத்து அனுப்புகிறார்கள். ஆனால் கீழ்த்தர சிப்பந்திகளுக்கோ தொல்லை மேல் தொல்லை கொடுக்கிறார்கள். கீழ்த்தர சிப்பந்திகள் இன்று வலுவற்றவர்களாக இருக்கிறார்கள், கீழ்த்தரச் சிப்பந்திகள் தங்கள் சலுகைகள் பற்றி ஏதாவது கேட்டால் 'இந்திய எல்லையில் சீன ஆக்கிரமிப்பு இருக்கிறது' என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள்! சீன விஷயத்தை, கேரளா தேர்தலுக்கும் உபயோகப்படுத்தினார்கள், சர்க்கார் தங்கள் நிலைமைகளைச் சமாளித்துக் கொள்வதற்கு சீன விஷயம் இன்னும் கொஞ்சம் நீடித்தால் நல்லது என்று இந்திய சர்க்கார் நினைக்கிறது. சீன எல்லைத் தகராரைக் காட்டி மிரட்டுகிறது.

இந்திய சர்க்கார் தங்களுடைய சிப்பந்திகளுக்கு சலுகைகள் வசதிகள் அவர் வாழ்க்கைக்குத் தேவை கொடுக்கத் தயங்குகிறது! இன்று பாராளு மன்ற அங்கத்தினர்களுக்கும் டில்லியிலுள்ள அமைச்சர்களுக்கும் சர்க்கார் செய்திருக்கும் வசதிகள் தேவைக்கு மீறி, அனுபவித்து மிஞ்சும்படியான நிலையிலிருக்கிறது! இருக்கும் வசதிகளை அனுபவிக்க முடியாது தத்தளிக்கிறார்கள். அமைச்சர்களுக்கு நல்ல வசதியான பங்களாக்கள் கட்டித் தரப்பட்டிருக்கிறது. அவர்களின் அவசர வேலைகளைக் கவனிப்பதற்கும், கூப்பிட்ட நேரத்தில் எந்த சமயத்திலும் பணிபுரியும் வேலையாட்களை சர்க்கார் தந்திருக்கிறார்கள். அந்த பணியாட்கள் தங்குவதற்காக அமைச்சர் பங்களாவோடு சேர்ந்து விடுதிகள் கட்டித் தரப்பட்டிருக்கிறது. அதில் அந்தப் பணியாட்கள் குடும்பங்களுடன் தங்குகிறார்கள். இவ்வளவு வசதிகள் சர்க்கார் செய்து கொடுத்திருக்கிறார்கள். இப்படி செய்து கொடுக்கும் வசதிகளையும் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். சில அமைச்சர்கள் இது சம்மந்தமாக பத்திரிகைகளில் செய்தி வந்திருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஒரு அமைச்சர் தமது சிப்பந்திக்காகக் கொடுக்கப்பட்ட விடுதியை ஒருவருக்கு வாடகைக்கு விடப்பட்டதாகவும், அவர் இரண்டு மாதம் சரியாக வாடகை கொடுத்து வந்ததாகவும், பின்னர் ஒரு மாதம் வாடகை கொடுக்காமலிருந்ததாகவும், அவரைக் கேட்டதற்கு பணம்இல்லையென்றும், வந்தால் தருவதாகக்கூறியதாகவும் அதேபோல் சேர்ந்தாற்போல் 3 மாதங்கள் வாடகை தராதிருந்ததாகவும் இதனால் கோபமடைந்த அமைச்சர், வாடகைக்கு இருந்தவரை கழுத்தைப் பிடித்துத் தள்ளி விட்டார். அதை அவர் போலீசில் புகார் செய்தார். இப்படிச்செய்தது அமைச்சர் என்று போலீசார் அறிந்ததும் ஒன்றும் செய்யாது விழித்தனர். ஆனால், அமைச்சர் செய்தது கிரிமினல் படியும், சிவில்படியும் குற்றம் செய்திருக்கிறார். வாடகைக் கட்டுப்பாட்டு சட்டப்படி வழக்குப் போடாது—இப்படி அமைச்சர் செய்ததை உணர்ந்து வாடகைக்கு இருந்தவருடன் ஒரு முடிவு செய்து கொண்டதாகவும் அந்தச் செய்தியிலிருக்கிறது.

தலைவர் திரு. ராஜன் அவர்கள் பேசும்போது, இந்த சம்பளக் கமிஷனால் சிப்பந்திகள் வாழ முடியாத நிலையிலிருக்கிறதென்றும், விலைவாசிகளின் ஏற்றத்தையும் குறிப்பிட்டார்!

இன்று விலைவாசிகள் ஏறி மார்க்கட்டில் பண்டங்கள் வாங்க முடியாத நிலையிலிருக்கிறது! அமைச்சர்கள் இதையெல்லாம் கவனியாதிருக்கிறார்கள்!

மற்றும் சேமிப்பு பற்றியும் நண்பர்கள் பேசினார்கள். இன்று சர்க்கார் சேமிப்பைப் பற்றிச் சொல்வது கேலி கூத்தாக இருக்கிறது!

சேமிப்பு என்பது தனக்கு வரும் வருமானத்தில் தனது தேவைகளுக்கான செலவுகள் போக மீதியைச் சேமித்து வைக்க வேண்டுமென்பதுதான் நியாயம்! இங்கு வருமானமே போதாமல் இருக்கும்போது சேமித்து வை என்றால் எப்படி நியாயமாகும்! இப்போது வரும் வருமானத்தைக்கொண்டு குடும்பம் நடத்த முடியாதிருககிறது. ஆள் மிஞ்சுவதே துர்லபமாக இருக்கிறது. தாய், தகப்பன். பிள்ளை குட்டிகளைக் காப்பாற்ற முடியாத நிலையிலிருக்கும்போது சேமிப்பு செய் என்றால் இதை என்னென்று கூறுவது? ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் இருப்பது போன்ற நிலைகூட இல்லை! அவர்களுக்கு இரண்டு ரூபாய் எட்டணாவை அவர்கள் கொடுத்தால், சர்க்கார் அதே இரண்டு ரூபாய் எட்டணா கொடுக்கிறது! இது ஐந்து ரூபாயாக அவன் கணககில் சேர்கிறது, இதனால் அவர்களுக்கு லாபமுண்டாகிறது. எப்படியோ கஷ்டப்பட்டு இப்படி சேமிகக ஆசைப்படுகிறான், சர்க்கார் சிப்பந்திகளுக்கு என்ன லாபமிருக்கிறது. சேமிப்புப் பத்திரம் என்று கூறி சிப்பந்திகள் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளப்படுகிறது. அதனால் சிப்பந்திகளுக்கு எந்தவித நன்மையும் இல்லை! ஆனால் சர்க்காருக்குப் பணம் தேவைப்படுகிறது. அதற்கு இப்படியெல்லாம் பணம் திரட்டி வருகிறது. கிராமங்களில் முரடன் இருப்பான். அந்த முரடன் அங்குள்ள விதவைகளின் பணத்தையெல்லாம் வாங்கி வட்டியுடன் பாதுகாத்துக் கொடுப்பதாகக் கூறி வாங்கிக் கொள்வான். பணம் கொடுத்தவர்கள் கேட்கப் போனால் 'எங்கே பணம் கொடுத்தாய்—பணம் இல்லை' என்பான். சர்க்கார் இவர்கள் வாங்கும் கடன்களுக்கு அதிகம் வட்டி தருவார்கள், சிப்பந்திகளுக்குக் குறைந்த வட்டிதான் தருவார்கள். இந்த நாட்டிலும், எந்த சர்க்காரும் செய்யாத கேடுகளையெல்லாம் இந்த சர்க்கார் தனது சிப்பந்திகளுக்குச் செய்து வருகிறது! இந்த சர்க்கார் எல்லா நாடுகளிடதிலும் கடன் வாங்கியிருக்கிறது. வாங்காத நாடுகளே இல்லை. அப்படி வாங்கியும் தனது சிப்பந்திகளுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்கான வகைகளைச் செய்யவே இல்லை!

எனக்கு இப்பொழுதிருக்கும் அமைச்சர்களில் டாக்டர் சுப்பராயன் மீது எப்பொழுதும் நம்பிக்கை இருக்கும். அவர் சூழ்ச்சியோடு, கேடான முறையில் நடக்கமாட்டார் என்று எண்ணியிருந்தேன்! காரணம் நல்லவர்! அவர் நீண்ட நாள் அமைச்சர் பதவி கிடைக்காது எதிர் பார்த்துக் கொண்டிருந்தவர்! அவர் சமீபத்தில் பேசும்போது கார்டு விலையை உயர்த்தப்போவதாகவும், அதிலிருந்து கிடைக்கும் அதிகப் பணத்திலிருந்து ஊழியர்களுக்கு சம்பளம் அதிகம் கொடுக்கப் போவதாகவும் கூறியிருக்கிறார்! இப்போது மக்கள் ஊழியர்களிடம் வெறுப்பு கொள்ளச் செய்யும் செய்கையாகும்! கார்டு விலை அதிகப் படுத்துவதால் கிடைக்கும் பணத்தை ஊழியர்களுக்கு கொடுத்துவிடுவார்களா? இப்படியெல்லாம் பேசிவருவதனால் பிரச்சினை தீர்ந்துவிடாது!

நீங்கள் முதல் ஆண்டு உங்கள் சங்கத்திற்கு என்னை உபத்தலைவராக தேர்ந்தெடுத்தீர்கள். உங்களுக்கு நான் ஒன்றும் செய்துவிடவில்லை! அப்படி இருந்தும் மீண்டும் என்னை இரண்டாம் முறையாக உபத் தலைவராகத் தேர்ந்தெடுத் திருக்கிறீர்கள். முதல் வருடத்தில் உங்களுக்காக ஒன்றும் செய்யவில்லையென்று தெரிந்தும் இந்த வருடமும் தேர்ந்தெடுத்திருப்பது என் மீது உங்களுக்கிருக்கும் பற்றும், அன்பும், நம்பிக்கையுமாகும் உங்களிடம் உறுதியாகக் கூறுகிறேன் என்னால் முடிந்ததையெல்லாம் உங்களுக்குச் செய்பக் காத்திருக்கிறேன்!

சமீபத்தில் நடைபெறும் பாராளுமன்றக் கூட்டத்தில் உங்கள் குறைகளைப் பற்றிப் பேசவேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள்! பாராளுமன்றத்தில் என்ன செய்ய முடியும் என்பது உங்களுக்குத் தெரியும்,

நான் எப்பொழுதும் ஒரு பிரச்சினையின்மீது பேசும்போது எல்லாப்பிரச்சினைகளைப் பற்றிப் பேசும்படியான வாய்ப்பு இருப்பதைத் தான் தேர்தெடுத்துப் பேசுவேன்! எனக்கு மட்டும் வாய்ப்புஇருந்தால் எல்லாப்பிரச்சினையின் மீதும் நடக்கும் விவாதங்களில் பங்கு கொள்வேன்! ஆனால் அப்படி எனக்குக் கிடைக்காது! என்னைத் தொடர்ந்து 7 பேர்கள் என்னுடனிருந்தால் எல்லா விவாதங்களிலும் பங்கு கொள்வேன். இப்போது நடைபெறவிருக்கும் கூட்டத்தில் உங்கள் பிரச்சினையைப் பற்றிப் பேசி உங்களுக்கு என்னாலானதைச் செய்வேன் என்று உறுதி கூறி முடிக்கிறேன்!

ஆட்சியாளரின் முதலைக் கண்ணீர் அழிவைத் தான் தேடித் தரும்!

கதருக்கு அதிகச் சலுகை தருகின்றவர்கள் கைத்தறிக்கு மட்டும் குறைப்பதேன்?

கே.ஏ. மதியழகன் பேச்சு

சென்னை பிராட்வே பிரபாத் சினிமாக் கொட்டகைக்கருகிலுள்ள பிடாரியார் கோவில் தெருவில் 4—2—60-ந் தேதி மாலை "தேன்" என்ற சிறுவர், சிறுமியர் வார இதழின் வெளியீட்டு விழாவும், பொங்கல் விழாவும் நடைபெற்றது.

'தேன்' வெளியீட்டின் ஆசிரியர் திரு. தமிழ்தாசன் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி, தி. மு. க பொங்கல் விழா நடத்தி வருவதன் அவசியம் பற்றியும், சிறுவர்—சிறுமியர்களுக்காக நல்ல பத்திரிகைகள் இல்லையென்றும், அதைக் கருத்தில் கொண்டே "தேன்" வெளியிடுவதாகவும் கூறி கூட்டத்திற்கு திருமதி. வெற்றிச்செல்வி அன்பழகன் அவர்களைத் தலைமை தாங்குமாறு கேட்டுக் கொண்டார்.

திருமதி அமிர்தாராகவன் அவர்கள் ஆமோதித்துப் பேசும்போது "தேன்" பத்திரிகையை ஆதரிக்குமாறும், சிறுவர், சிறுமியர்களுக்காக வெளிவரும் மற்ற பத்திரிகைகளால் குழந்தைகள் அறிவு மங்கிவிடும் என்றும், அறிவும், தன்மான உணர்ச்சியும் பரவுவதற்கான முறையில் "தேன்" வருகிறதென்றும் கூறினார்.

பின்னர் திருமதி. வெற்றிச்செல்வி அன்பழகன் அவர்கள் பொங்கல் விழாவைப் பற்றியும், "தேன்" பத்திரிகையின் அவசியம் பற்றியும், சிறுவர், சிறுமியர்கள் நல்லறிவாளர்களாகத் திகழ வேண்டுமானால் அவர்களுக்கு உலகச் செய்திகளையும், அறிவுக்குப் பொறுத்தமான கருத்துக்களையும் பத்திரிகை மூலம் தர வேண்டுமென்றும், மக்களின் நோயைப் போக்க "தேன்" மூலம் மருந்து கொடுப்பதுபோல் சிறுவர்களின் அறிவு வளர்ச்சியுற இந்தத் "தேன்" பத்திரிகை மூலம் பாடுபட வேண்டுமென்றும். பொங்கல் விழா அறிவுக்குப் பொறுத்தமான பாட்டாளி விழாவென்றும், அதை நாம் கொண்டாடுவது, உழைப்பின் உயர்வை விளக்குவதற்கே என்றும், தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் பாடுபட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

பின்னர் நகர மன்ற உறுப்பினர் குமாரசாமி, மாணவ, மாணவிகள் பேசியபின் "தென்னகம்" ஆசிரியர் திரு. கே. ஏ. மதியழகன் பி. ஏ., அவர்கள் பேசியதாவது—

அன்புள்ள தலைவர் அவர்களே, நண்பர்களே, தாய்மார்களே! நமது நண்பர் தமிழ்தாசன் அவர்கள் சிறுவர், சிறுமியர்களுக்காக தேன் என்கின்ற பெயரால் ஒரு வார இதழ் ஆரம்பித்து அதன் ஆரம்ப விழாவை என்னைக் கொண்டு நடத்த முடிவு செய்தமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

"தேன்" என்கின்ற பெயர் மிக அழகான பெயர், இன்பமான பெயர். இதற்காகத்தான் பாரதியார்கூட "செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்று தன் பாடலில், இன்பத் "தேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார். தேன் என்றால் இனிமை என்று ஒரு பொருள் உண்டு. இந்த இனிமையை சிறுவர் சிறுமியர்களுக்கு ஊட்டி அவர்களை ஆற்றல் உடையவர்களாகவும், அறிவுடையவர்களாகவும் ஆக்குவதற்கு இந்த 'தேன்' பாடுபடும் என்று நம்புகிறேன், நண்பர் தமிழ்தாசன் அவர்களும், திருமதி அமிர்தா ராகவன் அவர்களும் பேசும்போது, நாட்டில் சிறுவர் சிறுமியர்களுக்காக நடத்தப்பட்டு வருகிறதென்றும், அது சிறுவர், சிறுமியர்களின் அறிவை—வீரத்தை பெருகச் செய்வதைவிட மழுங்கச்செய்து வருகிறதெனக்குறிப்பிட்டார்கள்!

ஆனால் 'தேன்' இந்த நாட்டு சிறுவ சிறுமியர்கள் தன்மானமுடையவர்களாகவும் எதையும் சிந்திக்கும் ஆற்றல் உடையவர்களாகவும் செய்துவர பாடுபட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். நமது நாட்டு சிறுவர் சிறுமியர்களுக்கு இளம் வயதிலேயே பயத்தையும், மூட நம்பிக்கைகளையும் புகுத்தி அவர்களை கோழைகளாக, தன்மானம் அற்றவர்களாக ஆக்கி வருகிறார்கள். அந்த நிலையை போக்கி சிறுவர் சிறுமியர்கள் இந்த நாட்டின் செல்வங்களாக விளங்குவதற்கான பணியினை 'தேன்' செய்து வருமென்று நம்புகிறேன். அதற்கு காரணம், தலைமை வகித்திருக்கும் வெற்றிச் செல்வி அம்மையார் இந்த விழாவில் கலந்து கொண்டதேயாகும். அம்மையார் தேன் இதழ் எப்படி பணிபுரிய வேண்டுமென்பதை பற்றி உங்களிடையே பேசினார்! அவர் பேசும்போது நோய்க்கு மருந்து அருந்தும்போது, மருந்தோடு தேனையும் கலந்து அருந்துவது போல் இன்று நாட்டு சிறுவர் சிறுமியர்களுக்கு சமூகத்தில் பல கேடான கருத்துக்களை புகுத்தி, அவர்களை பகுத்தறிவற்ற நோயாளிகளாக்கி வருவதால் அறிவு என்ற மருந்தை 'தேன்' என்ற இந்த இதழில் சேர்த்து சிறுவர் சிறுமியர்களின் அறிவு வளர பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் என்றார். இது மிகவும் உண்மையானதாகும். நம் நாட்டு சிறுவர் சிறுமியர்களை தாய் தந்தையர்களும், மற்றவர்களும் பல மூட நம்பிக்கைகளை கூறி பேய் என்றும், பூச்சாண்டி என்றும் நாலு கண்ணன், ஐந்து கண்ணன் என்றெல்லாம் கூறி, நம்ப முடியாத, அறிவுக்கு ஒவ்வாத பல கருத்துக்களை அவர்களிடம் பரப்பி, அவர்களை கோழைகளாக்கி மூட நம்பிக்கையுடையவர்களாகத் திகழும்படி செய்வதை தேன் மாற்றியமைக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் இன்று சிறுவர் சிறுமியர்களாக உள்ளவர்கள், எதிர்காலத்தில் நாட்டின் பொது காவலர்களாக திகழ வேண்டியவர்கள். அவர்கள் நல்லறிவு படைத்தவர்களாக, ஆற்றல் மிக்கவர்களாக இருக்க வேண்டுமென்பதே என்னுடைய ஆசை.

சகோதரி, அமிர்தராகவன், அவர்கள் 'தேன்' இதழில் தங்கைகளுக்கு என்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார், பல பத்திரிகைகளில் தம்பிகளுக்கு என்றிருப்பதை மாற்றி தங்கைகளுக்கென போட்டு மிக அழகாக எழுதியிருக்கிறார்.

இம்மாதிரி பல கட்டுரைகள் தேன் இதழில் வரவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். நம் நாட்டு சிறுவர்கள் சிறந்த முறையில், ஒழுக்கத்தில் உயர்ந்தவர்களாகவும், பண்பாட்டில் சிறந்தவர்களாகவும் திகழ வேண்டுமென்பதற்காகவே இந்த 'தேன்' இதழை துவக்கியிருப்பதாக இதன் ஆசிரியர் தமிழ்தாசன் ஆரம்பத்தில் அழகாக எடுத்துரைத்தார். அவர் பேசிக்கொண்டிருக்கும் போது மேடையில் ஒரு சிறு நிகழ்ச்சி நடந்தது! அது யாருக்கும் தெரியாது! அது எனக்கும், அருகில் அமர்ந்திருக்கும் நண்பருக்கும்தான் தெரியும். ஒரு பரட்டை தலையுடைய சிறுவன், மிகவும் பரிதாப நிலையில் வந்து என் கால்களை தீண்டி 'ஐயா பசியாய் இருக்கிறது; ஒரு காலணா கொடுங்கள்' என்று கேட்டான்!

இம்மாதிரி சிறுவர்கள் இந்த நாட்டில் இருக்கிற பொழுது, வாழ்க்கை வசதியற்ற குடும்பங்களில் பிறந்த காரணத்தால், இன்று தெருத் தெருவாக பிச்சையெடுக்கும் நிலைமையிருந்தால் அவர்களுக்கு அறிவூட்டும் பிரச்சாரம் எப்படிச் செய்ய முடியும், ஆகவே "தேன்" இதழ் இதையெல்லாம் மனதில் கொண்டு சிறந்த முறையில் பாடுபட முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கூட்டத்தோடு பொங்கல் விழாவும் நடத்தப்படுவதாக நான் கேள்விப் பட்டேன். ஆனால் பொங்கல் போய் இரண்டு மாதங்கள் கழித்து பொங்கல் விழா கொண்டாடுவது என்பது அவ்வளவு சிறந்ததல்ல. நாம் பொங்கல் விழாவை தைத் திங்கள் முதல் வாரத்தில் கொண்டாட வேண்டும் இருப்பினும் நாம் பொங்கல் விழா என்று ஒரு கூட்டத்தை கூட்டி நமது கருத்துக்களையும், கொள்

(12-ம் பக்கம் பார்க்க)

கொள்கைதனைக் களையவரும் கொடுவாளாம்!
நற்கொள்கைதனை பரப்பும் நல்லேடாம்!!

'சுதந்திரம்'

(முற்போக்கு அரசியல் மாதமிருமுறை ஏடு)

இலக்கியப் பகுதி உண்டு!
இன் தமிழ்ச் சுவையு முண்டு!!

விலை 12 காசு ஆண்டு சந்தா 3 ரூ.

முன் பணம் கட்ட விரும்புவோர் மட்டும் விண்ணப்பிக்கவும்.

விவரங்கட்கு :— பொறுப்பாளர்,
"சுதந்திரம்"
6, ஆறுமுகப்பா தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

egistered as a Newspaper in CEYLON
Regd No M. 7071 விலை 16 காசு **MALAIMANI** இலங்கையில் 20ச PhoneNo. 83285

ஜனநாயக விரோதிகளை ஒழிக்க முன் வாரீர்!

கழகக் கண்ணியத்தை கட்டிக் காத்திடுவீர்!

(மதியழகன் பேச்சு)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

கைகளையும் விளக்குகிறோம்! பொங்கல் விழா பகுத்தறிவு விழா! பாட்டாளியின் பயனை கண்டு மகிழும் மகிழ்ச்சி விழா! உழைப்பாளிகள் தங்கள் உழைப்பின் பயனைக் கண்டு மகிழும் விழா! அப்படிப்பட்ட விழாவைத் தான் நாம் கொண்டாடுகிறோம். பொங்கல் விழாக் கொண்டாட வேண்டுமென்று நாம் சொல்லுகிறோம்! ஆனால் இந்தப் பொங்கல் விழாவை எல்லோராலும் கொண்டாட முடிவதில்லை

ஆனால், நம் நாட்டில் எல்லோரும் பொங்கல் விழாக் கொண்டாடி மகிழும் நிலையில்லை, வறுமை தாண்டவமாடி, வாழ்வதற்கு வகையற்று இருக்கிறார்கள்.

சென்னை நகரில் கடந்த சில ஆண்டுகளாகக் கைத்தறி விழா நடக்கிறது, அதில அமைச்சர்களும், உயர்தர அதிகாரிகளும் கலந்து கொள்ளுகிறார்கள். ஆடல்-பாடல், நாடகம் நடைபெறுகிறது. அந்த விழாவில் கைத்தறியாளர்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது. சர்க்கார் கைத்தறிக்கும் பாதுகாப்புக் கொடுப்பதாக மக்கள் நினைக்க வேண்டும் என்பதற்காக இந்த வேடிக்கை நடத்துகிறதே தவிர வேறு என்ன செய்து விட்டது சர்க்கார்.

ஏதோ கைத்தறிக்காக பாதுகாப்புகள் "ரிபேட்" கொடுப்பதாக முதலைக் கண்ணீர் வடித்து வருகிறது.

ஏழு எட்டு ஆண்டுகளுக்கு முன் நமது தென்னகத்தில் கைத்தறியாளர்கள் வேலையின்றி ஊர், ஊராகச் சுற்றி, பெற்ற பிள்ளைகளை விற்று, பெண்கள் கற்பிழந்து தவித்துக் கொண்டிருக்கும் போது இந்த சர்க்கார் என்ன செய்தது, ஊர் ஊராக பிச்சை எடுத்தார்களே, பல பேர் செத்து மடிந்தார்களே என்ன செய்ததது இந்த சர்க்கார்?

நமது அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி கூறுவார்கள் "சர்க்காருக்கு கைத்தறி விஷயத்தில் நிரந்தரமான கொள்கை கிடையாது! கைத்தறிக்கு அக்கரை இருப்பதாகக் கூறுவது வெறும் வேஷம்" என்று. அது மாத்திரமல்ல இன்று கைத்தறி விஷயமாக சர்க்கார் மூன்று பெண்டாட்டிக்காரன் நிலையில் இருக்கிறது என்றும் அறிஞர் அண்ணா அவர்கள் கூறுவார்கள். அது போல் தான் சாக்கார் நிலையும் இன்று இருக்கிறது. கைத்தறிக்கு பாதுகாப்பு அளிப்பதாக ஒரு புறம் கூறிக் கொண்டு கதருக்குப் பணம் ஒதுக்குகிறது.

ஆலைக்காரர் மனம் புண்படக் கூடாதென்று கருதி ஆலைத் துணிக்கும் பாதுகாப்பு, கைத்தறிக்கும் பாதுகாபபு கொடுக்கிறேன் என்கிறார்கள். இது எப்படி முடியும்? கதருக்கு காட்டும் அக்கரை, அன்பு கைத்தறிக்குக் காட்டுவதில்லை.

ஒருவனுக்கு ஒரு பெண்டாட்டி இருந்தால் நிம்மதியாக வாழ்க்கை நடத்த முடியும், இரண்டாவது பெண்டாட்டி இருந்தால் சமாளிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. மூன்றாவது பெண்டாட்டி இருந்தால அவள் கதி என்னவது!

உண்மையான அன்போ, அக்கரையோ கிடையாது. இந்த நாட்டில் கைத்தறிக்காகவும் கைத்தறியாளர்களின் நிலையைப் போக்கவும் சர்க்கார் அவர்களின் நிலையை மாற்ற வேண்டுமென்பதற்காகவும், நமது கழகமும் நமது தலைவர்களும் செய்த பணிகளை யாரும் மறந்திருக்க முடியாது நமது தலைவர் அறிஞர் அண்ணா அவர்களும் நமது தோழர்களும் கைத்தறித் துணிகளை வீடு வீடாக, தெருத் தெருவாக பேரூர்களிலும், சிற்றூர்களிலும் பட்டி தொட்டிகளிலும் தலைமேல் சுமந்து விற்றோம்.

சர்க்காருடன் அது பற்றி பலமாகப் போராடினோம்! இன்று கைத்தறியாளரைப் பற்றிக் கவனிக்கப்படுகிறதென்றால் அது நமது பணியால் தான் நம்முடைய தோழர்கள் கைத்தறியை தவிர வேறு துணிகளைக் கட்டுவதில்லை! வீட்டில் உள்ள அனைவரும் கைத்தறி ஆடைகளைத் தான அணிகிறார்கள்! ஆனால் சர்க்கார் சரியான கவனம் செய்யாமல் வெறும் கைத்தறி விழாக் கொண்டாடுவதில் கவனம் செலுத்துகிறது. இதனால் எல்லாம் கைத்தறி வளர்ந்து விடாது! நம்முடைய தலைவர்களை ஆரம்பத்தில் இந்த விழாவுக்கு அழைத்தார்கள், பேச வைத்தார்கள்! ஆனால் இப்போது நம்மவர்களை அழைப்பதில்லை. காரணம் நமது அறிஞர் அண்ணா அவர்களும் [illegible] மற்றவர்களும் சர்க்கார் கைத்தறி மீது உண்மையான [illegible] இல்லை என்பதை [illegible] விளக்கினார்கள் இதைக் கண்ட விழா நடத்துபவர்கள் இப்போது அழைப்பதில்லை! ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தார் கைத்தறியாளர்களின் குறைகளைக் களைவது நமது ஜீவாதாரக் கொள்கையாக வைத்திருகிறது, கைத்தறி தான் உடுத்துவது என்று ஒவ்வொரு கழகத்தோழனும் சபதம் செய்து கொண்டிருக்கிறான்,

சமீபத்தில் நடந்த தூத்துக்குடி இடைத் தேர்தலில் நாம் தோற்று விட்டோம் என்று தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஓ. வி, அளகேசனிலிருந்து மற்றும் பலரும் கேலி செய்கிறார்கள் நாம் தோற்றது பற்றிக் கவலைப் படவில்லை! தேர்தலில் காங்கிரசார்—அமைச்சர்கள் செய்து வந்த தில்லுமுல்லுகள் பணம்—பதவி, செல்வாக்கு அதிகாரம் துஷ்பிரயோகம் இவைகளை வைத்து, அதிகாரத்தால் பலரை மிரட்டி வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஜனநாயகம் பேசும் இவர்கள் ஜனநாயகத்தைக் கொன்று வெற்றி பெற்றிருக்கிறார்கள் இது என்றும் நடந்து விடாது. மக்கள் என்றாவது ஒரு நாள் கண் விழிக்கத் தான் செய்வார்கள். தூத்துக்குடியில் நாம் கம்யூனிஸ்ட்டுக் கட்சியுடன் தேர்தலுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டதை கேலியும், கிண்டலும் செய்கிறார்கள்! மக்களின் குறைகளைக் களைவதில் கவனம் செலுத்தாது, மக்களுடைய வாழ்க்கையை செப்பனிடுவதில் அக்கரை காட்டாது தான் தோன்றித் தனமாக ஆட்சி செய்து வரும் ஒரு அரசாங்கத்தை எதிர்க்க எதிர் கட்சிகள் தங்கள் கொள்கைகளை மறந்து மக்கள் நலனை எண்ணி ஒரு குறிப்பிட்ட காரியத்தில் ஒன்று சேர்வது அரசியலில் நடப்பது ஒன்று தான். [illegible] ஒன்றும் ஆச்சரியப்படும் ஒரு விஷயமல்ல ஆனால் கேரளத்தில் என்ன செய்தீர்கள்? அங்கு என்ன நடந்தது? அங்கு ஜனநாயக முறையில் நடந்து வந்த ஒரு சர்க்காரை அதிகார ஆசையால் செய்யத்தகாதது செய்து கவிழ்த்து விட்டு, சேராதவர்களோடு தேர்தலுக்காகச் சேர்ந்து அகில இந்தியாவிலிருந்து தலைவர்களை இறக்கி, பல தலைவர்களை அங்கு இறக்கி உங்களது செல்வாக்கையும், பணபலத்தையும் அதிகார பலத்தையும் காட்டி வெற்றி பெற்றீர்கள்! அது மட்டுமா? மதவாதக் கட்சியான லீக்குடன் கேரளத்திலுள்ள ஜாதிக் கட்சிகளுடன், மற்றும் இந்த நாட்டில் ஆளும் கட்சிக்கு எதிராகப் பணியாற்றி வரும் சோசலிஸ்ட்டு பிரஜா சோசலிஸ்ட் கட்சி, தீவிர சோசலிஸ்ட் கட்சி போன்றவைகளுடன் கூட்டு சேர்ந்து வெற்றி பெற்றீர்கள்.

இந்த வெற்றியைக் காட்டி கேலி செய்கிறீர்கள் இது அறிவுடைமையாகாது!

ஆகவே இப்போது நீங்கள் போகும் போக்கு என்றும் நிலைத்து வாழாது. ஆகவே மக்களாகிய நீங்கள் ஒற்றுமையாக இருந்து கழகத்திற்கு ஆதரவு [illegible], இந்த ஜனநாயக விரோதிகள் ஒழிவதற்கான எல்லாவகையிலும் ஆதரவு தர வேண்டுமென்று கொண்டு உங்களிடமிருந்து விடைபெறுகிறேன்.

சேலம் மாவட்ட

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாடு

அம்மா பேட்டை 2-ம் எண்
மார்கட் மைதானத்தில்

21—2—60 ஞாயிறு காலை 9-மணி முதல்
இரவு 9 மணி வரை நடைபெறும்.

தலைவர் :
எம். எஸ். வெங்கடாசலம், எம்.ஏ.

திறப்பாளர் :
சீர்காழி சோமசுந்தரம், பி.ஏ.

தி. மா. மு. கழகப் பொதுச்செயலாளர் :
திரு. எஸ். டி. சோமசுந்தரம்

மற்றும் பல மாணவர், தோழர்கள் மாநாட்டில் பங்கேட்பர.

மாநாட்டு சம்பந்தமாக தொடர்பு கொள்ள விரும்புவோர் கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

இரா. வெங்கடேசன்
45-B, திரு. வி. க. பாதை
சேலம்-3

இங்ஙனம்,
இரா. வெங்கடேசன்,
வ. கு. தலைவர்.

ஆசிரியரும், வெளியிடுபவரும், அச்சிடுபவரும் பி.எஸ். இளங்கோ கல்விப் பிரகாசம் பிரஸ், 40 திரு வல்லிக்கேணி [illegible] ரோடு, சென்னை-5
அலுவலகம்: 1-85, வாணியர் தெரு, சென்னை